Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

தமிழ்Mirror

www.tamilmirror.lk

WEDNESDAY, SEPTEMBER 21, 2021

புதன்கிழமை 21, செப்டெம்பர் 2022 | ஒளி: 08 கதிர் 104 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | FREE

# ஏப்ரல் வரை கடும் பஞ்சம் நிலவும்

## உலக உணவுத் திட்டம் எச்சரிக்கை

இலங்கையின் தற்போதைய நிலையை சீர்செய்ய ப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படாவிடின், ஒக்டோபர் முதல் ஏப்ரல் வரையான காலப்பகுதி கடுமையானதாக அமையும் என்று உலக உணவுத் திட்டம் எச்சரித்துள்ளது.

தொடர்ச்சி P2

# பிரபாகரனின் காணிக்கு சிவப்பு எச்சரிக்கை

எம்.றொசாந்த்

யாழ்ப்பாணம் - வல்வெட்டித்துறை பகுதியில் அமைந்துள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் வீட்டுக் காணிக்கு, வல்வெட்டித்துறை நகர சபையினால் சிவப்பு எச்சரிக்கை ஒட்டப்பட்டுள்ளது.

காணியில் இருந்த வீடு முற்றாக இடித்து அழிக்கப்பட்டுள்ள நிலையில், காணி பராமரிப்பின்றிக் கைவிடப்பட்டுள்ளமையால், அப்பகுதியில் பற்றைகள் வளர்ந்துள்ளன.

இந்நிலையில், பற்றைகளால் டெங்கு நுளம்புகள் பரவும் அபாயம் உள்ளது என சுட்டிக்காட்டி, குறித்த காணியை உடனடியாக துப்புரவு செய்ய வேண்டும் எனவும் , இல்லாவிடின் அதனை நகர சபை கையகப்படுத்தும் எனவும் வல்வெட்டித்துறை நகர சபையினால் அறிவித்தல் ஒட்டப்பட்டுள்ளது.

# விசேட தெரிவுக்குழு வேண்டும்

2019ஆம் ஆண்டு நவம்பர் மாதத்திற்கு பின்னர் நாட்டின் பொருளாதாரத்துக்கு ஏற்பட்ட பின்னடைவு தொடர்பாக ஆராய்வதற்கு, பாராளுமன்ற விசேட தெரிவுக் குழுவொன்றை நியமிக்குமாறு எதிர்கட்சித் தலைவர் உள்ளிட்ட 35 பாராளுமன்ற உறுப்பினர்கள் கையொப்பமிட்ட கடிதமொன்று சபாநாயகரிடத்தில் நேற்று (20) கையளிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2





- பிரித்தானிய வாழ் புலம்பெயர் இலங்கையருக்கு ஜனாதிபதி அழைப்பு
- வடக்கின் பிரச்சினைகள் தீர்க்கப்படும்
- வடக்கில் மட்டுமல்ல தெற்கிலும் முதலீடு செய்ய முடியும்

# இலங்கையில் முதலீடு செய்யுங்கள்

தற்போதுள்ள நெருக்கடிக்களை வெற்றிகொண்டு, வளமான தேசத்தைக் கட்டியெழுப்ப அனைவரும் ஒன்றிணைந்து போராட வேண்டும் என பிரித்தானிய வாழ் இலங்கையர்களிடம் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2



# இந்திய மீனவர்கள் எண்மர் கைது

செந்தூரன் பிரதீபன், வி.நிதர்ஷன், எம்.றொசாந்த்

யாழ்ப்பாணம் - காரைநகர் கடற்பரப்பில் தமிழக மீனவர்கள் எட்டு பேரை, கடற்படையினர் நேற்று (20) அதிகாலை கைது செய்துள்ளதுடன், அவர்களின் படகையும் மீட்டுள்ளனர்.

ஒரு படகில் 08 தமிழக மீனவர்கள் எல்லை தாண்டி, காரைநகர் கடற்பரப்பினுள் நுழைத்து மீன் பிடியில் ஈடுபட்டிருந்த வேளை, அப்பகுதியில் சுற்றுக்காவல் பணியில் ஈடுபட்டிருந்த கடற்படையினாரால் கைது செய்யப்பட்டனர்.

தொடர்ச்சி P2

### நீண்டகால முதலீடுகள் மூலம்

# இலங்கைக்கு ஆதரவளிப்போம்

## இந்தியா தெரிவிப்பு

இலங்கை மக்கள் எதிர்நோக்கும் சிரமங்களை நிவர்த்தி செய்வதற்காக இந்தியா முன்னெப்போதும் இல்லாத வகையில் இந்த ஆண்டில் சுமார் 4 பில்லியன் அமெரிக்க டொலர் இருதரப்பு உதவிகளை வழங்கியுள்ளது. அதேபோல் இந்தியா எதிர்காலத்தில் நீண்ட கால முதலீடுகள் மூலம் இலங்கைக்கு உதவ தயாராக உள்ளது என இந்திய தூதரகம் அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளது.

சாத்தியமான வழிமுறைகள் மூலம் நாங்கள் இலங்கைக்கு உதவுவோம்.

தொடர்ச்சி P2

### குறுந்தூர்மலை

# காணி அளவீட்டை நிறுத்துமாறு அமைச்சர் அதிரடி உத்தரவு

## கூட்டமைப்பின் வலியுறுத்தலுக்கு அமைய அமைச்சர் விதுர நடவடிக்கை



குருந்தூர் மலையில் தமிழர்களுக்கு சொந்தமான 612 ஏக்கர் காணிகளை அளவீடு செய்ய தொல்பொருள் திணைக்கள பணிப்பாளர் நாயகம் எடுத்த நடவடிக்கையை உடனடியாக நிறுத்துமாறு புத்தசாசன,

தொடர்ச்சி P2

### மஸ்கெலியா பெருந்தோட்ட நிறுவனத்துக்கு எதிரான

# தொழிற்சங்கப் போராட்டம் வெற்றி

## அறிவித்தது இ.தொ.கா

ஆ.ரமேஸ்

மஸ்கெலியா பெருந்தோட்ட நிறுவனத்துக்கு எதிராக, இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைமையில் முன்னெடுக்கப்பட்ட தொழிற்சங்க நடவடிக்கை வெற்றியளித்துள்ளது என இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தெரிவித்துள்ளது.



இலங்கை தொழிலாளர் காங்கிரஸிற்கும், மஸ்கெலியா பெருந்தோட்ட நிறுவனத்துக்கும்இடையிலான கலந்துரையாடல் ஒன்று, கொட்டகலை சி.எல்.எப் வளாகத்தில் நேற்றைய தினம் நடைபெற்றது.

தொடர்ச்சி P2

# தேசிய பேரவை தீர்மானம் நிறைவேற்றம்

பாராளுமன்றத்தில் புதிதாக ஸ்தாபிக்கப்படவுள்ள “தேசிய பேரவை” என்ற பெயரிலான பாராளுமன்ற குழு தொடர்பான தீர்மானம் பாராளுமன்றத்தில் நேற்று (20) நிறைவேற்றப்பட்டது.

இத்தீர்மானம் வாக்கெடுப்பு இன்றி நிறைவேற்றப்பட்டது.

“தேசிய பேரவை” என்ற பெயரிலான பாராளுமன்ற குழுவின் தலைவர் பதவி சபாநாயகருக்கு வழங்கப்படவிருப்பதுடன், இதன் உறுப்பினர்களாகப் பிரதமர், பாராளுமன்ற சபை முதல்வர், எதிர்க்கட்சித் தலைவர்,

தொடர்ச்சி P2

# மன்னருடன் சந்திப்பு



மறைந்த இரண்டாம் எலிசெப் மகாராணியின் இறுதி கிரியையில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பங்கேற்றிருந்தார். அதன்பின்னர், பிரித்தானிய மன்னர் சார்லஸுடன் ஆழமான கலந்துரையாடலிலும் ரணில் விக்கிரமசிங்க ஈடுபட்டிருந்தார். தனது பாரியார் மைத்திரி விக்கிரமசிங்கவுடன் சென்றிருக்கும் ஜனாதிபதி, இன்று (21) நாடு திரும்புவார்.

# அடுத்ததாக பசிப் போராட்டம்

எரிபொருள், எரிவாயுவை கொண்டு வந்துவிட்டால் மக்கள் அமைதியாக இருந்துவிடுவார்கள் என எவரும் நினைக்கக்கூடாது, அடுத்ததாக பசிக் கொடுமையால் மக்கள் கொதித்தெழும் நிலைமை உருவாகலாம் என சுயாதீன அணி பாராளுமன்ற உறுப்பினரான முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ச சபையில் எச்சரித்தார்.

தொடர்ச்சி P2

### தேசிய சபையை அமைக்க

# அனைவரும் ஆதரவு தாருங்கள்



சர்வகட்சியின் இணக்கப்பாட்டுடன் தேசிய சபை அமைக்கும் தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டும். அதற்கமைய பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் அனைத்துக் கட்சிகளின் இணக்கப்பாட்டுடனேயே தேசிய சபையை அமைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும், இதன்படி அனைத்துக் கட்சிகளுடன் தேசிய சபையை அமைப்பதற்கு பூரண ஆதரவை வழங்க வேண்டும் எனவும் பிரதமர் தினேஸ் குணவர்தன சபையில் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று (20) தேசிய சபையை அமைப்பது தொடர்பான யோசனையை முன்வைத்து உரையாற்றும் போதே பிரதமர் இதனை தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

### மதுபானம், புகையிலைப் பொருட்களுக்கான

# விலைகள்,வரிகளை அதிகரிக்க வேண்டும்



நாட்டில் அத்தியாவசிய உணவுப் பொருட்களின் பண வீக்கத்தை விடவும், மதுபானம் மற்றும் புகையிலைப் பொருட்களுக்கான பண வீக்கம் குறைவாகவே உள்ளது என தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, மதுபானம் மற்றும் புகையிலைப் பொருட்களுக்கான விலைகள் மற்றும் வரிகளை ஏன் அதிகரிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவில்லை என சபையில் கேள்வி யெழுப்பியுள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று (20) நிலையியற் கட்டளை 27/2 இன் கீழ் கேள்வியெழுப்பி உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் இதனை கூறியுள்ளார்.

தொடர்ச்சி P2

### இலங்கைக்கான உதவிகள் குறித்து

# யூ.எஸ்.எயிட் - இலங்கை பேச்சுவார்த்தை தொடர்கிறது

ஐக்கிய இராச்சியத்தின் சர்வதேச அபிவிருத்திக்கான முக்கரவமைப்பின் துணை நிர்வாகி ஐசோபெல் கோல்மேன், வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரியை நியூயோர்க்கில் சந்தித்திருந்தார்.



யூ .எஸ்.எயிட் நிர்வாகி சமந்தா பவரின் இலங்கை விஜயத்தின் போது முன்னெடுக்கப்பட்ட கலந்துரையாடலின் தொடர்ச்சியாக,

தொடர்ச்சி P2

# மீண்டும் நீள்கிறது எரிபொருள் வரிசை

தற்போது நிலவும் எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக, நாடளாவிய ரீதியில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களில் மீண்டும் எரிபொருள் வரிசை நீண்டு செல்வதாக தெரிவிக்கப்படுகிறது.

தொடர்ச்சி P2

### தனுஷ்கோடி மணல் திட்டில்

# குழந்தைகளுடன் தவித்த 12 இலங்கையர்கள் மீட்பு

## அகதிகளின் எண்ணிக்கை 169ஆக உயர்வு

எஸ்.றொசேரியன் லெம்பேட்

இலங்கையில் இருந்து இந்தியாவிற்கு படகு மூலம் அகதிகளாக சென்ற நிலையில், தனுஷ்கோடி அடுத்த இரண்டாம் மணல் திட்டில் உணவின்றி குழந்தைகளுடன் தஞ்சமடைந்த இலங்கையர்கள் 12 பேரை, இந்திய கடலோர காவல்படையினர் நேற்று (20) காலை பத்திரமாக மீட்டுள்ளனர்.

மீனவர்கள் அளித்த தகவலின் அடிப்படையில், இவ்வாறு மீட்கப்பட்டவர்களை, அரிச்சல்முனை கடற்கரைக்கு அழைத்து வந்து விசாரணைக்கு பின் மண்டபம் அகதிகள் முகாமில் தங்க வைத்துள்ளனர்.

மீட்கப்பட்டவர்களிடம், மரைன் பொலிஸார் நடத்திய விசாரணையில், யாழ்ப்பாணம் பகுதியை சேர்ந்த மூவரும் ஏனையவர்கள் மட்டக்களப்பை சேர்ந்தவர்கள் எனவும் தெரியவந்துள்ளது.

அத்துடன், தம்மிடம் உள்ள நகைகளை விற்று பணம் 2 இலட்சம் ரூபாய் கொடுத்து படகில் தமிழகத்துக்கு அகதிகளாக வந்ததாக தெரிவித்துள்ளனர்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்



# இலங்கையில் முதலீடு செய்யுங்கள்

புலம்பெயர் அலுவலகப் பணிகள் உள்ளிட்ட இலங்கையில் உள்ள புதிய முதலீட்டு வாய்ப்புக்களைப் பயன்படுத்திக் கொள்ளுமாறும் ஜனாதிபதி அழைப்பு விடுத்துள்ளார். வடக்கில் காணப்படும் காணிப்பிரச்சினை, காணாமற்போனவர்கள் தொடர்பான பிரச்சினை ஆகியவற்றுக்குத் தீர்வு காண வேண்டும் என்றும், அதிகாரப் பகிர்வின் சில அடிப்படைகள் குறித்து கவனம் செலுத்தப்பட வேண்டும் என்றும் ஜனாதிபதி இதன்போது சுட்டிக்காட்டினார்.

இரண்டாம் எலிசபெத் மகாராணியின் இறுதிச் சடங்கில் கலந்துகொள்ள பிரித்தானியாவிற்கு சென்றுள்ள ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, பிரித்தானிய வாழ் புலம்பெயர் இலங்கையர்களுக்கும் இடையில் நேற்று முன்தினம் (19) பிற்பகல் சந்திப்பொன்று நடைபெற்றது.

பிரித்தானியாவிலுள்ள இலங்கை உயர்ஸ்தானிகராலயத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்தக் கூட்டத்தில் பிரித்தானிய வாழ் இலங்கை வர்த்தகர்கள், முதலீட்டாளர்கள், தொழில் வல்லுநர்கள் உட்பட பலரும் கலந்துகொண்டனர்.

எமது நாடு பொருளாதார ரீதியாக வீழ்ச்சியடைந்துள்ளது என்பது இரகசியமல்ல. இந்தப் பிரச்சினையை நாமே தீர்க்க வேண்டும். சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சுவார்த்தைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன. நாம் பெற்றுள்ள கடன்களையும் அடைக்க வேண்டும். கடனை அடைப்பதற்கு இன்றிலிருந்து 25 ஆண்டுகள் வரை செல்லும். அதாவது 2048 இல், இலங்கை சுதந்திரம் பெற்று 100 ஆண்டுகள் நிறைவடையும் சந்தர்ப்பத்தில் இலங்கை சுபீட்சமான நாடாக உருவாக முடியும்.

ஜனநாயகம் வேண்டும் என்றால் நிலையான ஆட்சி, ஒழுக்கம் மற்றும் சட்டத்தின் ஆட்சி என்பன இருக்க வேண்டும். வீடுகளை எரிப்பதா அல்லது அலுவலகங்களைக் கைப்பற்றுவதா என்பதை நீங்கள் தீர்மானிக்க முடியாது. அது ஜனநாயகம் அல்ல. ஜனநாயகம் என்பது சட்டத்தின் ஆட்சியின் கீழ் செயல்படுவதாகும். வடக்கில் காணப்படும் காணிப்பிரச்சினை, காணாமற்போனவர்கள் தொடர்பான பிரச்சினை, அவர்களுக்கு உரிய நட்டஈடு வழங்குவது தொடர்பில் எழுந்துள்ள பிரச்சினை என்பவற்றுக்கு தீர்வு வழங்க வேண்டும். அதிகாரப் பகிர்வின் சில அடிப்படைகளைக் கவனிக்க வேண்டும். 2018ஆம் ஆண்டு அரசியலமைப்பை திருத்த நாம் நடவடிக்கை எடுத்தபோது வடக்கு கிழக்குக்கு வெளியில் உள்ள ஏழு முதலமைச்சர்களும் எதிர்க்கட்சித் தலைவரும் யோசனைகளை முன்வைத்தது மகிழ்ச்சியளிக்கிறது. வடக்கு, கிழக்கு பாராளுமன்ற உறுப்பினர்களும், முதலமைச்சர்களும் அதற்கு உடன்பட்டுள்ளதால் எமக்கு அதனை தொடர முடியும். அதனை நிறைவேற்ற முடியும் என்றும் நம்புகிறேன்.

புலம்பெயர் அலுவலகம் ஒன்றை ஆரம்பிப்பதற்கான பணி முன்னெடுக்கப்படுகிறது. வெளிவிவகார அமைச்சு அதைச் செயல்படுத்தி வருகிறது. அது ஜனாதிபதியின் அலுவலகத்தின் கீழ் இருக்கும். சில காலங்களின் பின்னர் அது வெளிவிவகார அமைச்சின் கீழ் கொண்டுவரப்படும். ஆனால் இந்த அலுவலகம் வெற்றிபெற வேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம். நாம் அனைவரும் இதில் கைகோர்க்க வேண்டும். வடக்கில் மட்டுமல்ல தெற்கிலும் முதலீடு செய்ய முடியும். உங்களில் சிலருக்கு தெற்கு அல்லது கிழக்கில் தொடர்புகள் இருக்கலாம். அவர்களுக்கு உதவியளிக்க விரும்பலாம். அதில் எந்த பிரச்சினையும் இல்லை. உங்களால் முடிந்த விதத்தில் இலங்கைக்கு உதவுங்கள் என ஜனாதிபதி தெரிவித்தார்.

## இலங்கைக்கு ஆதரவளிப்போம்

குறிப்பாக இலங்கை விரைவில் பொருளாதார மீட்சி, வளர்ச்சியை அடைவதற்காக முக்கிய பொருளாதார துறைகளில் நீண்டகால முதலீடுகளை ஊக்குவிப்போம் என இந்திய தூதரகம் தெரிவித்துள்ளது.

சர்வதேச நாணய நிதியத்திற்கும் இலங்கை அரசாங்கத்திற்கும் இடையிலான பணியாளர் மட்ட உடன்படிக்கையின் முடிவையும் நாங்கள் எதிர்பார்க்கின்றோம். அதேபோல் இலங்கையின் பொருளாதார மீட்சி மற்றும் வளர்ச்சிக்காக இலங்கையின் முக்கிய பொருளாதார துறைகளில் இந்தியாவிடமிருந்து நீண்டகால முதலீடுகளை ஊக்குவிப்பதன் மூலம், சாத்தியமான அனைத்து வழிகளிலும் இலங்கைக்கு நாங்கள் தொடர்ந்து ஆதரவளித்து வருகிறோம்.

## தேசிய பேரவை தீர்மானம் நிறைவேற்றம்

ஆளும் கட்சியின் முதற்கோலாசான் மற்றும் அரசியல் கட்சிகளின் தலைவர்களால் தீர்மானிக்கப்பட்டவாறு இலங்கையில் உள்ள அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளிலிருந்து ஒன்பதாவது பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற முப்பந்தைந்துக்கும் (35) மேற்படாதோர் உறுப்பினர்களாகக் காணப்படுவர்.

## அனைவரும் ஆதரவு தாருங்கள்

பாராளுமன்றத்தில் அனைத்து அரசியல் கட்சிகள் மற்றும் கட்சிகளின் தலைவர்களிடையே ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட இணக்கப்பாட்டுக்கு அமையவே தேசிய சபையை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கொள்கை திட்டங்களை செயற்படுத்துவதற்காக இதனை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. இதன்மூலம் மேற்பார்வை குழுக்கள், நிதிக் குழுக்கள், வங்கி நடவடிக்கைகள் தொடர்பான குழு உள்ளிட்ட பல்வேறு குழுக்கள் இணைக்கப்படவுள்ளன.

அத்துடன் சர்வகட்சியின் இணப்பாட்டுடன் தேசிய சபை அமைக்கும் தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டும் என்றார்.

## மீண்டும் நீள்கிறது எரிபொருள் வரிசை

பல எரிபொருள் நிரப்பு நிலையங்களில் எரிபொருள் இல்லை என்ற பதாகைகள் மீண்டும் தொங்கவிடப்பட்டுள்ளதுடன், பல நிலையங்களில் மக்கள் வரிசை காணப்படுகிறது.

எரிபொருள் கையிருப்பு இன்மையால் முத்துராஜவெல முனையம் மூடப்பட்டுள்ளதாகவும் இதன் காரணமாக எரிபொருள் நிரப்பு நிலையங்களில் தட்டுப்பாடு ஏற்பட்டு, மக்கள் மிகவும் சிரமத்துக்கு உள்ளாகியுள்ளதாகவும் தெரியவருகிறது.

முத்துராஜவெல முனையத்தில் எரிபொருள் கையிருப்பு இல்லை என மிகவும் நம்பகத்தன்மை வாய்ந்த வட்டாரங்களில் இருந்து தெரியவந்துள்ளதாக அறியமுடிகிறது.

## காணி அளவீட்டை நிறுத்துமாறு அமைச்சர் அதிரடி உத்தரவு

சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க தொலைபேசியின் ஊடாக உத்தரவிட்டுள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் குருந்தூர் மலையிலே தமிழர்களுக்கு சொந்தமான, குருந்தூர் மலை ஆதி சிவன் கோவிலுக்கு சொந்தமான முல்லைத்தீவு மாவட்ட விவசாயிகளுக்கு சொந்தமான 612 ஏக்கர் காணிகளை இன்று (21) அளவீடு செய்ய தொல்பொருள் திணைக்கள பணிப்பாளர் நாயகம் நடவடிக்கை எடுத்துள்ள நிலையில், நேற்று காலை ஸ்ரீதரன் எம், சார்ள்ஸ் நிர்மலநாதன் எம்.பி.யும் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்கவை சந்தித்து இது குறித்து கலந்துரையாடியிருந்தனர்.

குருந்தூர் மலை பற்றிய விடயத்தைப் பற்றி இவர்கள் இருவரும் பேசியபோது இவ்வாறு அளவீடு செய்வது தனக்குத் தெரியாதென அமைச்சர் தெரிவித்துள்ளார். அத்துடன் சார்ள்ஸ் நிர்மலநாதன் எம்.பி.யின் தொலைபேசி ஊடாக தொல்பொருள் திணைக்கள பணிப்பாளர் நாயகத்தை தொடர்பு கொண்டு அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க உடனடியாக அளவீட்டு பணியை நிறுத்துங்கள் எனக்கூறியுள்ளார்.

அத்துடன் இரண்டு நாட்களில் குறுந்தூர் மலை குறித்து முழுமையான அறிக்கை தனக்கு வழங்கப்பட வேண்டும் எனவும் அமைச்சர் தொல்பொருள் திணைக்கள பணிப்பாளர் நாயகத்திடம் வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து பாராளுமன்றத்தில் நேற்று(20) இடம்பெற்ற தேசிய சபை தொடர்பான விவாதத்தில் ஸ்ரீதரன் எம்.பி இதனை தெரிவித்ததுடன், சார்ள்ஸ் எம்.பி தமிழ் மிரருக்கும் உறுதிப்படுத்தினார். அமைச்சரின் பணிப்பை ஏற்று 612 ஏக்கர் காணிகளை அளவீடு செய்வதனை தொல்பொருள் திணைக்கள பணிப்பாளர் நாயகம் நிறுத்துகின்றாரா? இந்த நாட்டில் அமைச்சருக்குரிய ஒருவர் அதிகாரத்தை ,அவர் பிறப்பிக்கின்ற உத்தரவை பணிப்பாளர் நாயகம் நிறைவேற்றுவாரா என்பதனை நாங்கள் நாளைவரை (இன்று) பொறுத்திருந்த பார்க்க வேண்டியுள்ளது என்றனர்.

## விலைகள், வரிகளை அதிகரிக்க வேண்டும்

மதுபானம் மற்றும் புகையிலைப் பொருட்களின் பாவனையை கட்டுப்படுத்த அனைத்து அரசாங்கங்களும் பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளன. ஆனால் இதன் மூலம் சட்டப்படியான மதுபானம் மற்றும் புகையிலைப் பொருட்கள் உள்ளிட்ட போதைப் பொருட்களின் பாவனை குறைந்தாலும் சட்டவிரோதமான போதைப் பொருட்களின் பாவனை அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

**“ புகையிலைப் பொருட்கள் மற்றும் மதுபானத்திற்கான பண வீக்கம் குறைவாகவே உள்ளது.**

மதுபானம் மற்றும் புகையிலைப் பொருட்களின் மீதான வரி அறவீடானது அனைத்து அரசாங்கங்களின் வருமானத்தை அதிகரிக்கும். ஆனால் இந்த அரசாங்கத்திடம் அது தொடர்பில் நிலையான திட்டம் இல்லாமை மற்றும் மதுபானம் மற்றும் புகையிலை பொருள் உற்பத்தி நிறுவனங்களின் முறையற்ற செயற்பாடுகளால் அரசாங்கத்திற்கு கிடைக்க வேண்டிய பெருமளவான வரிகள் இல்லாமல் போகின்றதாக தெரிவிக்கப்படுகின்றது. இதனால் தேசிய கொள்கையொன்றை பயன்படுத்த வேண்டியது அவசியமாகும்.

தற்போதைய நிலைமையில் உணவுப் பொருட்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. இவற்றுக்கான பண வீக்கமும் அதிகமாக உள்ளது. ஆனால் புகையிலைப் பொருட்கள் மற்றும் மதுபானத்திற்கான பண வீக்கம் குறைவாகவே உள்ளது. ஏன் இவற்றுக்கான வரிகளையும் விலைகளை அரசாங்கம் அதிகரிக்கவில்லை என்று கேட்கின்றேன். இதனை செய்தால் நாட்டு மக்களுக்கு பல நிவாரணங்களை வழங்கலாம். ஆனால் அதனை செய்யாது இருப்பதற்கான காரணம் குறித்த நிறுவனங்களுக்கும் அரசியல்வாதிகளுக்கும் இடையே காணப்படும் இரகசிய தொடர்புகளே காரணமாக உள்ளது என்றார்.

## ஏப்ரல் வரை கடும் பஞ்சம் நிலவும்

பட்டினியால் பாதிக்கப்பட்டுள்ள நாடுகளை உள்ளடக்கி உலக உணவுத் திட்டம் தயாரித்துள்ள வரை படத்தின் அடிப்படையிலேயே இந்த தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

பொருட்களின் விலையேற்றத்தால் 60 சதவீதமான இலங்கையர்கள் மந்த போஷாக்கு உணவை உட்கொள்வதாகவும் 63 இலட்சம் பேர் உணவுப் பாதுகாப்பற்ற நிலையில் உள்ளனர் என்றும் உணவுத் திட்டம் சுட்டிக்காட்டியுள்ளது.

## விசேட தெரிவுக்குழு வேண்டும்

நாட்டின் இன்றைய நிலைமைக்கு காரணம் என்ன என்பது மட்டுமல்லாது, யாருடைய தவறின் காரணமாக மக்கள் இன்று பாதிக்கப்பட்டுள்ளனர் என்பதையும் கண்டறிய வேண்டும் எனவும் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்தார்.

## இந்திய மீனவர்கள் எண்மர் கைது

கைது செய்யப்பட்ட 08 மீனவர்களையும் அவர்களின் படகையும் மேலதிக நடவடிக்கைகளுக்காக யாழ்.மாவட்டக் கடற்தொழில் நீரியல் வளத்துறை அதிகாரிகளிடம் கையளித்தனர்.

குறித்த இந்திய மீனவர்கள் 08 பேரையும் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 4ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க, ஊர்காவல்துறை நீதவான் ஜெ. கயாநிதிபாலன் உத்தரவிட்டார்.

## தொழிற்சங்கப் போராட்டம் வெற்றி

இதன்போது, கடந்த ஒருவாரத்திற்கும் மேலாக இடம்பெற்ற தொழிற்சங்க நடவடிக்கையில் தொழிலாளர்களுக்கு எந்தவிதமான பாதிப்புகளும் ஏற்படாத வண்ணம் தீர்வுகள் எட்டப்பட்டுள்ளன.

பேச்சுவார்த்தையின் போது ஆயிரம் ரூபாய் சம்பளம் உட்பட பல்வேறு கோரிக்கைகளுக்கு மஸ்கெலியா பெருந்தோட்ட நிறுவனம் இணங்குவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிறுவனத்தால் வழங்கப்பட்ட அனைத்து உறுதி மொழிகளையும் எழுத்து மூலம் அறிவித்த பின்னரே, தொழிற்சங்க நடவடிக்கை கைவிடப்படுமென்றும் இ.தொ.கா அறிவித்துள்ளது.

## அடுத்ததாக பசிப் போராட்டம்

பாராளுமன்றத்தில் நேற்று (20) நடைபெற்ற தேசிய சபையை அமைப்பது தொடர்பான விவாதத்தில் உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

எரிபொருள், எரிவாயுவை கொண்டு வந்துவிட்டால் மக்கள் பேசாமல் இருந்துவிடுவார்கள் என சிலர் நினைக்கின்றனர். அவ்வாறு நினைக்க வேண்டாம். அடுத்ததாக பசியே போராடப்போகின்றது. பசியில் உண்ணாது இருக்கும் பிள்ளைகளின் அப்பாக்களின் ஆவேசம் இன்னும் வெளியாகவில்லை. முன்னர் எரிபொருள் இல்லாத மின் தடையால் ஆவேசத்தை மக்கள் வெளிப்படுத்தினர். அவர்கள் பசியால் வழிநடத்தப்பட்டவர்கள் அல்ல. அடுத்ததாக பசியால் வழிநடத்தப்படும் மக்களே வருவர். உணவு இன்றி ஆவேசமாக நடந்துகொள்ளும் மக்களே இருப்பர். இதனை தடுக்க வேலைத்திட்டங்கள் அவசியமாகும். பொதுவான திட்டம் வேண்டும். ரணில் விக்கிரமசிங்க பிரதமரான போதும், ஜனாதிபதியான போதும் திட்டங்களை கேட்டோம். ஆனால் அந்தத் திட்டத்தை முன்வைக்கவில்லை. அது என்ன என்று கூறுங்கள். இன்னும் விளையாட வேண்டாம் என்றார்.

## யூ.எஸ்.எயிட் – இலங்கை பேச்சுவார்த்தை தொடர்கிறது



வெளிவிவகாரத்துறை அமைச்சர் அலி சப்ரி மற்றும் துணை நிருவாகி ஐசோபெல் கோல்மன் ஆகியோர், கூட்டுத் திட்டங்களின் ஊடாக இலங்கைக்கு மேம்படுத்தப்பட்ட உதவிகள் குறித்து கலந்துரையாடியுள்ளனர்.

நாட்டின் உடனடி, நடுத்தர மற்றும் நீண்ட காலத் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் இலங்கைக்கு உதவுவதற்கான வழிகளைத் தொடர்ந்தும் ஆராய்வதாகவும், நிலையான பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்தவும், ஊக்குவிக்கவும், நிர்வாகத்தை வலுப்படுத்தவும், சுதந்திரமான மற்றும் வளமான வாழ்க்கையை கட்டியெழுப்பவும் தொடர்ந்து முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்று அமெரிக்க அரசாங்கம் தெரிவித்துள்ளது.

## குழந்தைகளுடன் தவித்த 12 இலங்கையர்கள் மீட்பு

தங்களை அழைத்து வந்த படகு, தனுஸ்கோடி முதல் திட்டில் இறக்கிவிட்டு சென்றதாகவும், காலை முதல் உணவின்றி தவித்து வந்த நிலையில், அருகில் மீன்பிடித்து கொண்டிருந்த மீனவர்களிடம் காப்பாற்றுமாறு உதவி கோரிய நிலையில், இந்திய கடலோர காவல் படை வீரர்கள் எங்களை பத்திரமாக மீட்டதாக வும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக கடந்த மார்ச் மாதம் 22ஆம் திகதி முதல் இன்று வரை இலங்கையில் இருந்து 169 இலங்கையர்கள் அகதிகளாக தமிழகம் சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.



## ஆட்சியாளர்களுக்கு மகாராணியே முக்கியம்



நாட்டில் உள்ள பிரச்சினைகளை விடவும் மகாராணியின் இறுதிக் கிரியையே முக்கியம் என நினைப்பவர்களினால் நாட்டின் பிரச்சினைகளை தீர்ப்பார்கள் என்று எதிர்பார்க்க முடியாது என சுயாதீன அணி பாராளுமன்ற உறுப்பினரான முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ச சபையில் தெரிவித்துள்ளார்.

தேசிய சபை எனும் யோசனையை முதலில் எமது கூட்டணியே முன்வைத்தது. பிரச்சினைகளை தீர்ப்பதற்கான முறைமைகளை உள்ளடக்கியே அதனை முன்வைத்திருந்தோம். அதில் அமைச்சர்களின் எண்ணிக்கை, வேறு நியமனங்கள் தொடர்பில் கலந்துரையாடுவதற்காகவே நாங்கள் அந்த யோசனையை முன்வைத்தோம்.

தற்போது முன்வைக்கப்பட்டுள்ள தேசிய சபை தொடர்பான யோசனை நாங்கள் முன்வைத்த யோசனை அல்ல. அதேபோன்று இப்போது சர்வகட்சி அரசாங்கமும் கிடையாது. சர்வகட்சி அரசாங்கத்தை அமைப்பதற்கு ஜனாதிபதி உள்ளிட்ட குழுவினருக்கு அக்கறை இல்லையேன்றே கருதுகின்றோம்.

## பெருந்தோட்ட மக்களுக்கு

# 10 ஆயிரம் வீடுகள் விரைவில்

இந்திய உதவித் திட்டத்தின் கீழ் 2015 ஆம் ஆண்டு முதல் இதுவரையில் பெருந்தோட்ட மக்களுக்காக 3799 வீடுகள் நிர்மாணிக்கப்பட்டுள்ளதாகவும், எதிர்காலத்தில் மேலும் 10 ஆயிரம் வீடுகளை நிர்மாணிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதாகவும் ஆளும்கட்சி பிரதம கொரடாவான அமைச்சர் பிரசன்ன ரணதுங்க சபையில் தெரிவித்துள்ளார்.

அமைச்சின் வீடமைப்பு வேலைத்திட்டம் மற்றும் இந்திய உதவித் திட்டத்தின் கீழ் வீடமைப்பு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. இதற்கமைய அமைச்சின் வீடமைப்பு திட்டத்தின் கீழ் 2015 ஆம் ஆண்டு முதல் இதுவரையில் தோட்டத்துறை மக்களுக்காக 4258 வீடுகளின் நிர்மாணங்கள்



நிறைவடைந்துள்ளன. அத்துடன் 1471 வீடுகள் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன.

இந்திய உதவித் திட்டத்தின் கீழ் வீடமைப்பு நடவடிக்கைகள் இரண்டு கட்டங்களாக முன்னெடுக்கப்படுகின்றது. இவற்றில் முதற் கட்டத்தில் 3799 வீடுகள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

> **2015 ஆம் ஆண்டு முதல் இதுவரையில் தோட்டத்துறை மக்களுக்காக 4258 வீடுகளின் நிர்மாணங்கள் நிறைவடைந்துள்ளன.**

அத்துடன் 201 வீடுகள் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன. இந்திய உதவித் திட்டத்தின் கீழான இரண்டாம் கட்ட வீடமைப்பின் போது 10 ஆயிரம் வீடுகளை அமைப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. அத்துடன் எதிர்வரும் வருடங்களில் வீடமைப்பு நிதி ஒதுக்கீட்டின் கீழ் தோட்டத் துறையில் வீடமைப்பு தேவைகளை கருத்திற்கொண்டு புதிய வீடுகளை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

## மதத்தலங்களுக்கு நிவாரண கட்டணம் வழங்க முடியாது



கடந்த காலங்களில் மின்கட்டண அதிகரிப்பின் போது ஏனைய பிரிவுகளிடமிருந்து கட்டணம் அறவிடப்பட்டு அதனூடாக மதத் தலங்களுக்கு நிவாரணக் கட்டணம் அறிமுகப்படுத்தப்பட்டது. ஆனால் தற்போது அவ்வாறு செயற்படுத்த முடியாது ,ஏனெனில் அனைவரும் பாதிக்கப்பட்டுள்ளனர் என மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று (20) விகாரைகள் மற்றும் மதத் தலங்களுக்கு மின்கட்டணத்தில் நிவாரணம் வழங்கல் குறித்து எதிர்த்தரப்பினர் முன்வைத்த கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

மின்னுற்பத்திக்கான கேள்வி மற்றும் செலவு அதிகரித்துள்ள நிலையிலும் கடந்த 8 ஆண்டு காலமாக மின்கட்டணத்தை அதிகரிக்காத காரணத்தினால் இலங்கை மின்சார சபை பாரிய நிதி நெருக்கடியை எதிர்க்கொண்டது. மின்சார சபை இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்திற்கு 8000 கோடி ரூபாவையும் தேசிய மற்றும் ஏனைய மின் விநியோகஸ்தர்களுக்கு 4500 கோடி ரூபாவையும் கடனாக செலுத்த வேண்டியுள்ளது.

## குற்றச்சாட்டுக்களை மறைக்க தேசிய சபையை வருகின்றது

ஜனாதிபதிக்கு மக்கள் ஆணை இல்லையென்றும், அரசாங்கத்திற்கு மக்கள் வரவேற்பு இல்லை என்றும் சர்வதேச அமைப்புகள் கூறும் நிலையில், தமக்கு எதிரான குற்றச்சாட்டுகள் மற்றும் சவால்களை சமாளிப்பதற்காக தேசிய சபையை பயன்படுத்துவதற்கு அரசாங்கம் முயற்சிக்கின்றது என ஜே.வி.பியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க சபையில் தெரிவித்தார்.

அப்போது முன்வைக்கப்பட்ட தேசிய சபை தொடர்பான யோசனைக்கும், இப்போது முன்வைக்கப்பட்டுள்ள யோசனைக்கும் இடையே பரஸ்பர வேறுபாடுகள் காணப்படுகின்றன.

எதிர்க்கட்சியினால் முன்வைக்கப்பட்ட தேசிய சபை தொடர்பான யோசனையில் பல்வேறு விடயங்கள் உள்ளன. இடைக்கால அரசாங்கம் அமைக்கப்பட வேண்டும்.

## 4 கோடியே 35 இலட்சத்து 33991 ரூபா 82 சதத்திற்கு என்ன நடந்தது ?

### கலையரசன் எம்.பி சபையில் கேள்வி



அம்பாறை மாவட்டத்திலுள்ள கல்முனை உவெஸ்லி கல்லூரியில் தொழில்நுட்ப பீடம் அமைப்பதற்காக கல்வி அமைச்சால் ஒதுக்கப்பட்ட 4 கோடியே 35 இலட்சத்து 33 ஆயிரத்து 991 ரூபா 82 சதத்திற்கு என்ன நடந்தது என தமிழ் தேசியக்கூட்டமைப்பின் எம்.பியான த. கலையரசன் சபையில் கேள்வி எழுப்பினார்.

2020-06-15 ஆம் திகதி கல்வி அமைச்சின் ஊடாக உவெஸ்லி உயர்தர பாடசாலைக்கு தொழில்நுட்ப பீடம் அமைப்பதற்காக 4 கோடியே 35 இலட்சத்து 33ஆயிரத்தி 991 ரூபா 82 சதம் ஒதுக்கீடு செய்யப்பட்டது. அத்துடன் 27-07-2020ஆம் ஆண்டு பத்திரிகையில் கேள்வி மனு கோரப்பட்டுள்ளது. அதற்கான ஆவணங்கள் என்னிடம் உள்ளன. கிழக்கு மாகாண தொழில்நுட்ப பிரிவுக்கட்டிடம் கிழக்கு மாகாண கல்விப்பணிப்பாளரின் அனுமதியோடு அகற்றப்பட்டுள்ளது. 5 வகுப்பறைகளைக் கொண்ட கட்டிடமும் கணினி அறையும் அகற்றப்பட்டுள்ளன.

இது தொடர்பில் நான் கேட்ட கேள்விக்கு கல்வி அமைச்சர் உரிய பதிலைத் தரவில்லை. 2000க்கு அதிகமான மாணவர்கள் கல்வி கற்கும் ஒரு உயரிய பாடசாலையில் இருந்த கட்டிடத்தையும் அகற்றிவிட்ட நிலையில் தொழில்நுட்பபீடம் அமைப்பதாக கூறி ஒதுக்கப்பட்ட நிதிக்கு என்ன நடந்தது என்பதுதான் என் கேள்வி. எனவே உவெஸ்லி உயர்தர பாடசாலைக்கு தொழில்நுட்ப பீடம் அமைப்பதற்காக ஒதுக்கப்பட்ட 4 கோடியே 35 இலட்சத்து 33ஆயிரத்தி 991 ரூபா 82 சத நிதிக்கு என்ன நடந்தது என்பதனைக் கண்டுபிடிக்க கல்வி அமைச்சு குழு ஒன்றை அமைத்து விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும் என்றார்.

## லயன் வீடுகளில் வசிப்பதும் மனித உரிமை மீறலே



தோட்டத் தொழிலாளர்கள் 200 வருடங்களுக்கும் மேலாக லயன் அறைகளில் வசிப்பதன் ஊடாக அவர்களின் மனித உரிமைகள் மீறப்படுபதாக எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் ரோஹினி குமாரி விஜேரட்ன சபையில் தெரிவித்துள்ளார்.

கடந்த நல்லாட்சி அரசாங்கத்தின் போது பெருந்தோட்ட மக்களுக்காக 7 பேர்ச்சர்ஸ் காணி உரித்து வழங்கப்பட்டது. ஆனால் சில வாரங்களுக்கு முன்னர் அது தொடர்பில் புதிய உரித்து விநியோகிக்கப்பட்டுள்ளது. தோட்டத் தொழிலாளர்கள் 200 வருடங்களுக்கும் மேலாக லயன் அறைகளில் வசிக்கின்றனர். இதன்மூலம் அவர்களின் மனித உரிமைகள் மீறப்படுபதாக நான் கருதுகின்றேன்.

இந்நிலையில் 7 பேர்ச்சர்ஸ் காணியில் வீடுகளை நிர்மாணிப்பதற்கான கடன் தொகை அல்லது வேறு ஏதாவது மானியம் உள்ளதா? நாட்டில் உள்ள பொருளாதார நிலைமையில் அரசாங்கத்தினால் அதற்கான நடவடிக்கைகளை நிறைவேற்ற முடியும் என்று நினைக்கவில்லை. இதனால் அவர்களுக்கு வீடுகளை அமைப்பதற்காக ஏதாவது வேலைத்திட்டங்களை முன்னெடுக்க முடியுமா? அதேபோன்று அங்கு லயன் அறைகளில் வசிப்போரில் அனைவரும் தோட்டத்தில் வேலை செய்வதில்லை. இதனால் காணிகளை வழங்கும் போதும், வீடுகளை அமைக்கும் போதும் தோட்டத்தில் வேலை செய்பவர்களுக்கே வழங்கப்படுகின்றது. இதனால் அவர்களும் அந்த வீடமைப்புக்குள் உள்வாங்கப்பட வேண்டும். அங்கு பெண்களுக்கு போதுமான வசதிகள் கிடையாது. இதனால் அங்குள்ளவர்களுக்காக விசேட வீடமைப்பு திட்டங்களை முன்னெடுக்க வேண்டும் என்றார்.




## பெண்களின் சுகாதார பாதுகாப்பை உறுதிசெய்தல்

### பொதுமக்கள் கேள்விகளுக்கு டுவிட்டர் ஸ்பேஸ் ஊடாக நேரடியாகப் பதில்

இலங்கையில் பெண்களின் சுகாதார பாதுகாப்பை உறுதிசெய்வதன் தேவை தொடர்பில் சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் ரோஹிணி கவிரத்ன ஆகியோர் கலந்துகொள்ளும் நேரடி டுவிட்டர் கலந்துரையாடல் இன்று (21) முற்பகல் 11.30 மணி முதல் பி.ப. 12.30 மணி வரை பாராளுமன்ற உத்தியோகபூராவ டுவிட்டர் (@ ParliamentLK) கணக்கினூடாக இடம்பெறவுள்ளது.

இந்நாட்டில் பெண்களின் சுகாதார பாதுகாப்பை உறுதிசெய்வது தொடர்பான பொதுமக்கள் கேள்விகளை #LKaskMP ஊடாக முன்வைக்க முடியும் என்பதுடன், அன்றைய தினம் நேரடியாக இணைந்து கொண்டும் கேள்விகளை முன்வைக்க முடியும்.

## தேசிய பேரவை என்பது பம்மாத்து விடயம்

### தமிழர்களுக்கு தீர்வுகளை வழங்கப்போவதில்லை



ஒருசில அரசியல் கைதிகளைக்கூட விடுதலை செய்ய திராணியற்ற இந்த அரசாங்கம் தேசிய பேரவையைக் கொண்டு வந்து என்ன செய்யபோகின்றது என சபையில் கேள்வி எழுப்பிய தமிழ் தேசியக்கூட்டமைப்பின் யாழ் மாவட்ட எம்.பியான எஸ். ஸ்ரீதரன் ,தமிழ் தேசியக்கூட்டமைப்பு இந்த தேசிய பேரவை தொடர்பில் நல்லெண்ணத்தைக் கொண்டிருக்கவில்லை. இந்த பேரவை ஒரு ஏமாற்று வேலை எனவும் கூறினார்.

இந்த நாட்டில் இவ்வாறு எத்தனையோ பேரவையில். சபைகள் உருவாக்கப்பட்டிருந்தாலும் இந்த நாட்டில் புரையோடிப்போயுள்ள தமிழர்களின் தேசிய பிரச்சினைக்கு தீர்வு காண்பதில் அவை வெற்றிகண்டுள்ளனவா என்று நீங்கள் சற்று சிந்தித்துப்பார்க்க வேண்டும்.

இந்த பேரவை ஒரு ஏமாற்று விடயம். பம்மாத்து விடயம் என்றார்.


**வரையறுக்கப்பட்ட தனியார் நிறுவனமொன்று கூட்டிணைக்கப்பட்டதற்கான பொது அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகளின் சட்டத்தின் பிரிவு 9 (1) விதிகளின் கீழ் கீழ்க்கானும் கம்பனி கீழே விபரிக்கப்பட்டுள்ளவாறு கூட்டிணைக்கப்பட்டுள்ளது என இத்தால் வழங்கபடுகின்ற அறிவித்தல்.

**நிறுவனத்தின் பெயர்:** யு. என். கே. மரைன் ஏஜன்சீஸ் என்ட் லொஜிஸ்டிக்ஸ் (பீவீட) எல்டீடி

**கூட்டிணைக்கப்பட்ட திகதி:** 24.09.2021

**பதிவுசெய்யப்பட்ட இல:** பீ வீ 00245626

**பதிவுசெய்யப்பட்ட அலுவலக முகவரி:** இல. 23ஈ, 1 வது ஒழுங்கை, பள்ளியாவத்தை, ஹெந்தல, வத்தளை.

கம்பனியின் செயலாளர்
டாக்டர் ஜே. எம். டீ. ஆரியரத்ன (பட்டய கணக்காளர்)

**வரையறுக்கப்பட்ட தனியார் நிறுவனமொன்று கூட்டிணைக்கப்பட்டதற்கான பொது அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகளின் சட்டத்தின் பிரிவு 9 (1) விதிகளின் கீழ் கீழ்க்கானும் கம்பனி கீழே விபரிக்கப்பட்டுள்ளவாறு கூட்டிணைக்கப்பட்டுள்ளது என இத்தால் வழங்கபடுகின்ற அறிவித்தல்.

**நிறுவனத்தின் பெயர்:** சி என்ட் ஏ ஹோல்டிங்ஸ் (பீவீட) எல்டீடி

**கூட்டிணைக்கப்பட்ட திகதி:** 07.04.2022

**பதிவுசெய்யப்பட்ட இல:** பீ வீ 00256138

**பதிவுசெய்யப்பட்ட அலுவலக முகவரி:** இல. 691ஃஏ, கொஹல்வில வீதி, தலுகம, களனி.

கம்பனியின் செயலாளர்
டாக்டர் ஜே. எம். டீ. ஆரியரத்ன (பட்டய கணக்காளர்)




கோவிலுக்கு அருகில் அமைக்கப்படவுள்ள

# கள்ளுத் தவறணைக்கு மக்கள் கடும் எதிர்ப்பு

செந்தூரன் பிரதீபன்





தென்மராட்சி, கொடிகாமம் வடக்கு பகுதியில் கோவில் ஒன்றுக்கு அருகில் கள்ளுத்தவறணையை அமைப்பதற்கான கட்டுமான பணி இடம்பெறும் பகுதியில் அப்பகுதி பொதுமக்கள் நேற்று (20) ஒன்று கூடி எதிர்ப்புத் தெரிவித்தனர்.

இதனால் அப்பகுதியில் சிறிது பதட்ட நிலைமை உருவானது.

குறித்த பகுதியில் கோவில், வீடுகள், விவசாய நிலங்கள் இருப்பதுடன் அருகில் உள்ள பொதுக் கிணற்றில் பிரதேசவாசிகள் குளிக்க செல்வதும் வழமை என மக்கள் சுட்டிக்காட்டினர்.

எனவே, குறித்த பகுதியில் கள்ளுத்தவறணை அமைக்கப்படுமானால் தாம் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்க வேண்டி ஏற்படும் எனச் சுட்டிக்காட்டிய பொதுமக்கள், அப்பகுதியில் கள்ளுத்தவறணை அமைக்க வேண்டாம் என்று தெரிவித்து, அங்கு கூடி தமது எதிர்ப்பை வெளியிட்டனர்.

சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர்.

அத்துடன், பிரதேச பொதுமக்கள் கையொப்பமிட்ட கடிதத்துடன் கூடிய மகஜர் ஒன்றை, கொடிகாமம் பிரதேச சபைத் தவிசாளரிடம் கையளித்தனர்.

நண்பனின்

## ஏ.ரி.எம் அட்டையை திருடியவருக்கு பிணை




செந்தூரன் பிரதீபன்

வேலனை பகுதியில் நண்பனின் ஏ.ரி. எம் அட்டையை திருடி 30,000 ரூபாய் பணத்தை திருட்டுத்தனமாக பெற்ற சந்தேகநபரை 50,000 ரூபாய் பிணையில் செல்ல ஊர்காவற்றுறை நீதவான் அனுமதி அளித்தார். மேலும், வழக்கு எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 17ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

வேலனை, துறையூர் பகுதியைச் சேர்ந்த 21 வயது இளைஞன், மதுபானம் வாங்குவதற்காக, தனது நண்பனின் கடன் அட்டையை திருடி பணத்தை பெற்றுள்ளார். பணத்தை இழந்த நபர், ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தார். முறைப்பாட்டுக்கு அமைய சந்தேகநபர் நேற்று முன்தினம் (19) கைது செய்யப்பட்டிருந்தார்.

சந்தேகநபரை, ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றத்தின் முற்படுத்திய போது அவர் தனது குற்றத்தை ஒப்புக் கொண்டார். வழக்கினை ஆராய்ந்த நீதவான் 50,000 பெறுமதியான ஆட்பிணையில் செல்ல அனுமதி வழங்கி, வழக்கை ஒத்திவைத்தார்.







## மகாராணிக்கு அஞ்சலி

யாழ்ப்பாணம், நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியின் ஸ்தாபகர் முதலியார் அத்தியார் அருணாசலத்தின் சேவைகளைப் பாராட்டி, 1953ஆம் ஆண்டு பிரித்தானியாவின் 2ஆம் எலிசபெத் மகாராணியாக முடிசூட்டு விழாவின் போது, பாராட்டுப் பத்திரமும் வெள்ளிப்பதக்கமும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

அதை நினைவுகூர்ந்து, எலிசபெத் மாகாராணிக்கு பாடசாலையில் நினைவேந்தல் நிகழ்வு, நேற்று முன்தினம் (19) நடைபெற்றது.

நிகழ்வில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் பீட சிரேஷ்ட பேராசிரியர் தி.வேல்நம்பி, எலிசபெத் மகாராணியின் நினைவஞ்சலி உரையை ஆற்றினார்.

(படங்கள்: எம். றொசாந்த்)

மானிப்பாயில்

## சிறுவர் பூங்கா திறந்து வைப்பு

வி.நிதர்ஷன்



வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட மானிப்பாய் பகுதியில், வலி தென்மேற்கு பிரதேச சபையால் சிறுவர் பூங்கா அண்மையில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்துகொண்ட புளொட் அமைப்பின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான த.சித்தார்த்தன் வைபவரீதியாக சிறுவர் பூங்கா திடலை திறந்துவைத்தார்.

இந்த நிகழ்வில் மாகாண சபை முன்னாள் உறுப்பினர் கஜதீபன், வலி. தென்மேற்கு தவிசாளர் அ.ஜெபநேசன், பிரதேச சபை உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

## முன்னாள் பொலிஸ் கசிப்புடன் கைது

**ஓய்வு பெற்ற உத்தியோகஸ்தர் கசிப்பை உடைமையில் வைத்திருப்பதாக கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில் கைது செய்யப்பட்டார்**

எம்.றொசாந்த்

பொலிஸ் திணைக்களத்தின் முன்னாள் உத்தியோகஸ்தர், யாழ்ப்பாணத்தில் கசிப்புடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் சேவையில் இருந்து ஓய்வு பெற்ற உத்தியோகஸ்தர் கசிப்பை உடைமையில் வைத்திருப்பதாக யாழ். மாவட்ட பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில் குறித்த உத்தியோகஸ்தர் கைது செய்யப்பட்டதுடன், அவரிடம் இருந்து ஒரு தொகை கசிப்பும் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட நபர், மேலதிக நடவடிக்கைகளுக்காக கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

போதை மாத்திரைகளுடன்

## இருவர் கைது

செந்தூரன் பிரதீபன்



புத்தூர் மேற்கு, நவக்கிரி பகுதியில் போதை மாத்திரைகளுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என, அச்சுவேலி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் பிரபாத் தெரிவித்தார்.

கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலுக்கு அமைய, சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டதுடன், அவர்களிடம் இருந்து 87 போதை மாத்திரைகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் 19, 27 வயது உடையவர்கள் எனவும் இவர்கள் அண்மைக்காலமாக தொடர்ச்சியாக போதை மாத்திரைகளை விற்பனை செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டு வந்ததாகவும் பொலிஸ் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

சிவில் உடையில் சென்ற பொலிஸார், தாமும் போதை மாத்திரை வாங்குவது போல் பாசாங்கு செய்து சந்தேகநர்களை கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களை, மல்லாகம் நீதவான் நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வீதியில் நடந்து சென்றவரிடம்

## சைக்கிளில் வந்த நபர் கொள்ளை

எம்.றொசாந்த்

யாழ்ப்பாணம், சங்கானை பகுதியில் வீதியில் நடந்து சென்று கொண்டிருந்தவரை, சைக்கிளில் வந்த நபர் கத்தியால் வெட்டிக் காயப்படுத்திவிட்டு, நகையையும் பணத்தையும் கொள்ளையடித்துள்ளார்.

சங்கானையில் உள்ள வங்கிக்கு சென்று விட்டு, வீட்டுக்கு குறித்த நபர் நடந்து சென்று கொண்டிருந்த வேளை, அவரை பின் தொடர்ந்து சைக்கிளில் வந்தவர், ஆள் நடமாட்டம் அற்ற பகுதியில் இடைமறித்து, கத்தியால் வெட்டிக் காயப்படுத்திவிட்டு, ஒன்றரை பவுண் தங்கச் சங்கிலி, 15 ஆயிரம் ரூபாய் பணம் என்பவற்றைக் கொள்ளையடித்து சென்றுள்ளார்.

பிரதேச சபைக்கு முன்னால்

# காரணம் தெரியாது ஒன்றுகூடிய பெண்கள்

வ.சக்தி







மட்டக்களப்பு, களுதாவளையில் அமைந்துள்ள மண்முனை தென் எருவில் பற்று பிரதேச சபையின் முன்னால், பிரதேசத்தின் பல இடங்களிலிருந்து வருகை தந்த பெண்கள், நேற்று (20) ஒன்றுகூடினர்.

இவ்வாறு ஒன்றுகூடிய சில பெண்கள் வாசகங்கள் எழுதப்பட்டடிருந்த பதாகைகளையும் கொண்டு வந்திருந்தனர்.

அப்பெண்களிடம் எதற்காக வந்துள்ளீர்கள் என ஊடகவியலாளர்கள் வினவிய போது, எம்மை பிரதேச சபையில் கூட்டம் ஒன்றுக்காக வருமாறு எமது மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் அழைத்துள்ளார்கள், அதற்காக வந்துள்ளோம் எனச் சில பெண்கள் தெரிவித்தனர்.

இன்னும் சிலர், எமது மாதர் சங்கத் தலைவிதான் எம்மை இவ்விடத்துக்கு கூட்டம் ஒன்றுக்காக அழைத்தார் எனவும் தெரிவித்தனர்.

இன்னும் சிலர் கருத்துத் தெரிவிக்கையில், பிரதேச சபை அமர்வின்போது பெண்களை அவதூறு செய்து பேசியதற்காக மனு ஒன்றை வழங்குவதற்காக வந்துள்ளோம் எனத் தெரிவித்தனர்.

இந்நிலையில், பெண்கள் கூடிநின்ற பிரதே சபையின் முன்னால் வருகை தந்த அப்பிரதேச சபை உறுப்பினர் மேகசுந்தரம் வினோராஜ், குறித்த பெண்களிடம் ஏன் வந்துள்ளீர்கள், எதற்காக வந்துள்ளீர்கள் என வினவினார்.


மேற்குறித்த விடயங்களை அப்பெண்கள் பிரதேச சபை உறுப்பினரிடமும் தெரிவித்தனர்.

ஆனாலும், பொலிஸின் அனுமதியின்றி ஆர்ப்பாட்டம் நடத்துவதற்கு ஒன்றுகூடியதற்காக பிரதேச சபை உறுப்பினர் மேகசுந்தரம் வினோராஜ் ஆகிய நான் களுவாஞ்சிகுடி பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளேன் என தெரிவித்ததயைடுத்து, அங்கு கூடிநின்ற பெண்கள் கலைத்து சென்றனர்.

வைத்தியசாலையில் கவனயீனம்:

## வயிற்று வலியால் குடும்பஸ்தர் மரணம்

எப்.முபாரக்



திருகோணமலை பொது வைத்தியசாலையின் கவனயீனத்தால் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார் என அவரது உறவினர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

குச்சவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இறக்கக்கண்டி 4ஆம் வட்டாரத்தில் வசித்து வந்த ஒரு பிள்ளையின் தந்தையான இஸ்ஸதீன் முஹம்மட் தஸ்லீம் (வயது 29) என்ற குடும்பஸ்தரே, நேற்று முன்தினம் (19) உயிரிழந்துள்ளார்.

குச்சவெளி தனியார் தொழிற்சாலையில் கடமையாற்றி வந்த மேற்படி குடும்பஸ்தருக்கு, வெள்ளிக்கிழமை (16) வயிற்று வலி ஏற்பட்டுள்ளது.

இதனை அடுத்து, மறுநாள் சனிக்கிழமை நிலாவெளி பிரதேச வைத்தியசாலையில் அவர் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில் வயிற்று வலி குறையாத காரணத்தால், மேலதிக சிகிச்சைக்காக நேற்று முன்தினம் அதிகாலை 3 மணியளவில் திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு குடும்பஸ்தர் மாற்றப்பட்டுள்ளார்.

குறித்த வைத்தியசாலையில் கடமையிலிருந்த வைத்தியரும் தாதியர்களும் நோயாளிக்கு சிகிச்சை அளிப்பதற்கு தாமதித்துள்ளதுடன், குறித்த நோயாளி உயிரிழந்து விட்டார் என அறிவித்துள்ளனர்.

நோயாளியை அவசர சிகிச்சை பிரிவில் அனுமதித்து, சிகிச்சையளிக்காமல் தாமதித்தமையாலேயே அவருடைய உயிர் பிரிந்ததாகவும் வைத்தியசாலை நிர்வாகமே இதற்கு காரணம் எனவும் உயிரிழந்தவரின் மனைவி உட்பட உறவினர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

இது தொடர்பில் திருகோணமலை பொது வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் ஜகத் விக்கிரமரத்னவிடம் கேட்டபோது, தாம் சுகாதார அமைச்சுக்கு கடிதம் மூலம் தெரியப்படுத்தி உள்ளதாகவும், பாதிக்கப்பட்டவர்களுக்கு சிறந்த தீர்வை பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

## ஆலங்கேணியில் கவனயீர்ப்பு




ஹஸ்பர், தீஷான் அஹமட்

கௌரவமான அரசியல் தீர்வுக்கான கோரிக்கையை முன்வைத்து, 100 நாள்கள் செயல்முனைவு மக்கள் குரல் கவனயீர்ப்புப் போராட்டம், கிண்ணியா, ஆலங்கேணி பிரதேசத்தில் நேற்று (20) நடைபெற்றது.

51ஆவது நாள் போராட்டமாக திருகோணமலை மாவட்ட மக்கள், சிவில் மற்றும் பெண்கள் அமைப்புகள் இணைந்து இப்போராட்டத்தை முன்னெடுத்தனர்.

**‘நிரந்தரமான அரசியல் உரிமை வேண்டும்’, ‘எங்கள் நிலம் எமக்கு வேண்டும்’, ‘நடமாடுவது எங்கள் உரிமை’, ‘பேச்சு சுதந்திரம் எங்கள் உரிமை’, ‘ஒன்று கூடுவது எங்கள் உரிமை’ எனக் கோஷங்களை எழுப்பியவாறு பேரணியாக வருகைதந்ததுடன், தங்களின் உரிமை கோரிக்கைகளையும் முன்வைத்தனர்**

‘நிரந்தரமான அரசியல் உரிமை வேண்டும்’, ‘எங்கள் நிலம் எமக்கு வேண்டும்’, ‘நடமாடுவது எங்கள் உரிமை’, ‘பேச்சு சுதந்திரம் எங்கள் உரிமை’, ‘ஒன்று கூடுவது எங்கள் உரிமை’ எனக் கோஷங்களை எழுப்பியவாறு பேரணியாக வருகைதந்ததுடன், தங்களின் உரிமை கோரிக்கைகளையும் முன்வைத்தனர்.

வட, கிழக்கு ஒருங்கிணைப்பு குழு ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்தக் கவனயீர்ப்புப் போராட்டத்தில், அரசியல் கைதிகளை விடுதலை செய்யக் கோரிய பதாகைகளையும் மக்கள் ஏந்தியிருந்தனர்.

அகில இலங்கை

## சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம்

எம்.எல்.எஸ்.டீன்



நிந்தவூர்- 02, முத்தகீன் பள்ளி வீதியைச் சேர்ந்த அப்துல் கரீம் முஹம்மது முபாரக், அகில இலங்கை சமாதான நீதவானாக அம்பாறை மாவட்ட மற்றும் நீதிவான் நீதிமன்ற நீதிபதி முன்னிலையில் அண்மையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

நிந்தவூர், அல்அஷ்ரக் தேசிய பாடசாலையின் பழைய மாணவரும், சாய்ந்தமருது தஃவா இஸ்லாமிய கலாபீடத்தின் முதல் ஹாபிளும், கல்வி சமூக கலாசார அமைப்பு அதன் நிர்வாக சபை உறுப்பினராகவும் செயற்பட்டு வருவதுடன், பல்வேறு சமூகப் பணிகளிலும் ஈடுபட்டுவருகிறார்.

தற்போது இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் நூலக உத்தியோகத்தராகவும் கடமையாற்றிவரும் இவர், அப்துல் கரீம் - கலிமத்துமா ஆகியோரின் புதல்வருமாவார்.

நீர்த்தாங்கி கட்டட சிதைவுகளால்

## பாதுகாப்புக்கு அச்சுறுத்தல்

பாறுக் ஷிஹான்



கல்முனை மாநகர சபைக்கு உட்பட்ட கல்முனை ஐஸ் வாடி கடற்கரை பகுதியில் உள்ள நீர்தாங்கி மற்றும் கட்டட சிதைவுகள் இடிந்து விழும் நிலையில் உள்ளதாக அப்பகுதி வாழ் மக்கள் அச்சம் தெரிவிக்கின்றனர்.

கடந்த காலங்களில் மருதமுனை, நற்பிட்டிமுனை, கல்முனை, சாய்ந்தமருது பகுதி மீனவர்களுக்கான ஐஸ்கட்டி தேவைகள் இவ்வாடி ஊடாகவே பூர்த்தி செய்யப்பட்டு வந்தன.

எனினும், குறித்த நீர் தாங்கியில் இருந்து தற்போது நீர் விநியோகம் மேற்கொள்ளப்படாத நிலையில், பாதுகாப்பற்ற நிலையில் உள்ள நீர்த்தாங்கி முழுமையாக பழுதடைந்துள்ளதுடன், ஐஸ் உற்பத்தி நிலையமும் செயலிழந்து காணப்படுகின்றது.

குறித்த நீர்த்தாங்கியில் காணப்பட்ட பாரிய வெடிப்புகள், அப்பிரதேச மக்களுக்கு அச்சுறுத்தலாக அமைந்துள்ளதுடன், கட்டடத்தின் சிறு பகுதிகள் உடைந்து விழுந்துகொண்டிருக்கின்றன.

இதனால் அதன் அருகில் விளையாட்டில் ஈடுபடும் சிறுவர்களும் அச்சுறுத்தல்களுக்கு முகங்கொடுத்துள்ளனர்.

எனவே, இந் நீர்த்தாங்கியை அகற்ற உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# பூர்த்தி செய்யப்படாத ஆட்டிஸ்மலை வீடமைப்புத் திட்டம்

## பயனாளிகள் சிரமம்

■ மஹேஸ் கீர்த்திரத்ன

கடந்த நல்லாட்சி அரசாங்கத்தால் தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சு ஊடாக, 'செமட்ட செவன' தேசிய வீடமைப்பு அபிவிருத்தி திட்டம் மூலம் மாத்தளை, உல்பத்த ஆட்டிஸ்மலை வீடமைப்பு திட்டத்தின் இரண்டாம் கட்ட பணிகள் இதுவரை பூர்த்தி செய்யப்படாமையால் பயனாளிகள் பெரிதும் அசௌகரியங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

இத்திட்டத்தின் முதலாம் கட்டத்தின் கீழ், 25 வீடுகள் அமைக்கப்பட்டு அது பயனாளிகளுக்கு கையளிக்கப்பட்டுள்ள நிலையில், இரண்டாம் கட்டத்தில் 23 வீடுகள் அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

எனினும் குறித்த 23 வீடுகளுக்கான 90 சதவீத பணிகள் இதுவரை பூர்த்தி செய்யப்படவில்லை என பயனாளிகள் தெரிவிக்கின்றனர்.



ஆட்சி மாற்றம் மற்றும் இந்த வீடமைப்பு திட்டத்திற்கான நிதி பற்றாக்குறையே இத்திட்டம் பாதியில் கைவிடப்பட்டமைக்கான காரணம் என்றும் சுட்டிக்காட்டுகின்றனர்.

மேலும், குறித்த வீடுகளில் அமைக்கப்பட்டுள்ள யன்னல், கதவுகள், மின்மானி, உள்ளிட்ட சில பொருட்களும் திருட்டுப்போவதுடன், இரவு நேரங்களில் பூர்த்தி செய்யப்படாத வீடுகளில் சட்டவிரோத செயற்பாடுகளும் இடம்பெறுவதாக பயனாளிகள் தெரிவிக்கின்றனர்.

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையுடன் ஏற்படுத்திக்கொண்ட ஒப்பந்தத்துக்கு அமைய முழு கடன் திட்டத்தின் மாதாந்த அறவீடு அறவிடப்பட்டு வரும் நிலையில், முழு கடன் திட்டத்தில் சொற்ப பணமே தமக்கு கிடைத்துள்ளது என்றும் தெரிவிக்கின்றனர்.

எனவே எப்படியாவது தமது சொந்த நிதியைப் பயன்படுத்தியாவது வீட்டுப் பணிகளை பூர்த்தி செய்ய தயாராக இருப்பதாகவும் எனவே முழு கடன் திட்டத்தில் செலுத்தப்பட வேண்டிய நிதியை செலுத்துமாறும் பயனாளிகள் கோரிக்கை விடுக்கின்றனர்.

இந்த வீட்டு திட்டத்தை ஆரம்பிக்க முன்னின்று செயற்பட்ட மாத்தளை பிரதேச சபையின் எதிர்கட்சித் தலைவர் காமினி கொஸ்தாவிடம் இது தொடர்பில் வினவியபோது,

மாத்தளை பிரதேச சபைக்குரிய ஆட்டிஸ்மலை வீடமைப்பு திட்டத்தில் 150 வீடுகளுக்கு மேல் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. முதல் கட்டத்தில் அந்த வீடுகள் அமைக்கப்பட்டு, தற்போது அங்கு மக்கள் வசிக்கத் தொடங்கியுள்ளனர். இதன் இரண்டாம் கட்டத்தில் ஆரம்பிக்கப்பட்ட 23 வீடுகளுக்கான பணிகள் நிறுத்தப்பட்டு பல மாதங்கள் கடந்துள்ளன.

எனவே புதிய அரசாங்கமாவது, இந்த மக்களுக்கு வழங்க வேண்டிய கடன் உதவியை வழங்கினால், அவர்கள் வீடுகளை அமைத்து குடியேறுவார்கள் என தெரிவித்தார்.

### நுவரெலியாவில்

# பாதுகாப்பற்ற படகுப் பயணம்

■ ரஞ்சித் ராஜபக்ஷ

நுவரெலியா, கந்தேஎல நீர்த்தேக்கத்தில் சுற்றுலாப் பயணிகளை படகு மூலம் அழைத்துச் செல்வது மிகவும் ஆபத்தானதாக மாறியுள்ளது.

நுவரெலியாவுக்கு வருகைதரும் அதிகளவான சுற்றுலாப் பயணிகள் குறித்த நீர்த்தேக்கத்தில் படகு மூலம் பயணிக்க அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர்.

இந்த நீர்த்தேக்கமானது, நீர்ப்பாசனத் திணைக்களத்தின் கட்டுப்பாட்டில் உள்ளதுடன், இங்கு வசிக்கும் சிலர் பிளாஸ்டிக் பீப்பாய்களைப் பயன்படுத்தி தயாரித்த பல படகுகளில், சுற்றுலாப் பயணிகளை அழைத்துச் செல்லும் நடவடிக்கையை முன்னெடுத்து வருகின்றனர்.

ஒரு படகில் ஒரே நேரத்தில் கிட்டத்தட்ட 20 சுற்றுலாப் பயணிகளை அழைத்துச் செல்லப்படுகின்றனர்.

அந்த படகுகளில் பயணிக்கும் சுற்றுலாப் பயணிகளுக்கும் பாதுகாப்பு அங்கிகள் வழங்கப்படுவதில்லை.



இது தொடர்பில் நுவரெலியா அனர்த்த முகாமைத்துவப் பிரிவின் உதவிப் பணிப்பாளர் ரஞ்சித் அழககோனிடம் வினவியபோது, படகில் பயணிக்கும் சுற்றுலாப் பயணிகளுக்கு, பாதுகாப்பு அங்கியை வழங்குமாறு படகுச் சேவையை நடத்துபவர்கள், பல தடவைகள் கடுமையாக எச்சரிக்கப்பட்டனர். அத்துடன் இங்கு சுற்றுலாப் பயணிகளை ஏற்றிச் செல்லும் படகுச் சேவையை முறையாகப் பேணுவதற்கான முறையான வேலைத்திட்டத்தை முன்னெடுக்குமாறு நீர்ப்பாசனத் திணைக்களம் மற்றும் நுவரெலியா பிராந்திய செயலாளருக்கு மாவட்டச் செயலாளர் பணிப்புரை விடுத்துள்ளதாகவும் தெரிவித்தார்.

# இராகலையில் வீடுடைப்பு; மூவர் கைது

■ ஆ.ரமேஸ்

இராகலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட டிக்ஸன்கோனர் தோட்ட பகுதியில் உள்ள வீடு உடைக்கப்பட்டு, பெறுமதியான பொருட்கள் திருடப்பட்டுள்ளன.

நேற்று முன்தினம் (19) மாலை இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவத்தில் ஈடுபட்டதாகக் கூறப்படும் சந்தேகநபர்கள் மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன், திருடப்பட்ட பொருட்களும் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

மேலதிக விசாரணையின் பின்னர், சந்தேகநபர்களை வலப்பனை நீதிமன்றில் ஆஜர் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

# ஹட்டனில் எகிறும் ஓட்டோ கட்டணங்கள்

■ சுதத்.எச்.எம்.ஹேவா

ஹட்டன் நகரிலிருந்து வாடகைக்கு அமர்த்திச் செல்லப்படும் ஓட்டோக்கள் அதிகமான கட்டணத்தை வசூலிப்பதாக பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றனர்.

இதில் சில ஓட்டோ சாரதிகள், 2 கிலோ மீற்றர் பயணிப்பதற்கு 400 ரூபாயை அறவிடுவதாகவும் ஒரு கிலோ மீற்றர் பயணிக்க 250 ரூபாயை அறவிடுவதாகவும் பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவிக்கின்றனர்.

அதேபோல், இரவு நேரங்களில் வாடகைக்கு அமர்த்தப்படும் சில ஓட்டோக்கள் 2 கிலோ மீற்றர் தூரம் செல்ல ஆயிரம் ரூபாய் வரை அறிவிடுவதாகவும் தெரிவிக்கின்றனர்.

எனினும், ஹட்டன் பிரதேசத்திலுள்ள பல வீதிகள் பயணிக்க முடியாத வகையில் சேதமடைந்துள்ளமை என்பவற்றுடன் வாகன உதிரிப் பாகங்களுக்கான தட்டுப்பாடு, விலை அதிகரிப்பு, ஓட்டோக்களை புதுப்பிக்க அதிக கட்டணம் அறவிடுகின்றமை போன்ற காரணங்களே தாம் ஓட்டோ கட்டணங்களை அதிகரிக்க காரணம் ஓட்டோ சாரதிகள் தெரிவித்தனர்.



# வங்கிக் கணக்குகள் ஆரம்பிக்கப்பட்டன

2021ஆம் ஆண்டு நடத்தப்பட்ட புலமைப்பரிசில் பரீட்சையில், ஹட்டன் கல்வி வலயத்தில் சிறந்த புள்ளிகளைப் பெற்ற 20 மாணவிகளுக்கு பீஸ் சிட்டி ஹட்டன் கழகத்தின் தலைவி வினோஷா கயாலினி தலைமையில் வங்கி கணக்குகள் ஆரம்பிக்கப்பட்டன. ரோட்டரக்ட் பீஸ் சிட்டி ஹட்டன், மக்கள் வங்கி பொகவந்தலாவ கிளை என்பன இதற்கு அனுசரணை வழங்கியிருந்தன.

(பி. கேதீஸ்)

### சப்ரகமுவ மாகாண கபடி போட்டியில்

# கேகாலை மாவட்டம் வெற்றி



■ சிவாணி ஸ்ரீ

சப்ரகமுவ மாகாண ஆண், பெண்களுக்கான கபடி விளையாட்டுப்போட்டி வெள்ளிக்கிழமை (16) இரத்தினபுரியில் நடைபெற்றது.

இரத்தினபுரி உள்ளக விளையாட்டரங்கில் நடைபெற்ற குறித்த கபடி போட்டியில் ஆண், பெண்களுக்கான இரு போட்டிகளிலும் முதலாம் இடத்தை கேகாலை மாவட்டம் பெற்றுள்ளது.



### இரண்டாவது தடவையாகவும்

# முருகன் கோவிலில் திருட்டு

■ ராமு தனராஜா

எட்டாம்பிட்டிய பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட பண்டாரவளை - நெளுவ தோட்ட ஸ்ரீ சிவசுப்பிரமணியர் கோவிலில், இவ் வருடத்தில் இரண்டாவது முறையாகவும் உடைக்கப்பட்டு திருடப்பட்டுள்ளது.

இதன்போது ஆலய விக்ரகத்தின் தாலி, ஆலயத்தின் திருவிழாவில் சேகரிக்கப்பட்ட பணம், உண்டியல் பணம் என்பன திருடப்பட்டுள்ளன.

கடந்த முறை இடம்பெற்ற திருட்டு சம்பவம் தொடர்பாக இதுவரையில் எவரும் கைதுசெய்யப்படாதநிலையில், இரண்டாவது முறையாகவும் உடைக்கப்பட்டு திருட்டு சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக எட்டாம்பிட்டிய பொலிஸார் மேலதிக விசாரணைகள் முன்னெடுத்து வருகின்றனர்.

### நோர்வூட்– பொகவந்தலாவை வீதியின்

# புனரமைப்பு பணிகளை ஆரம்பிக்க கோரி ஆர்ப்பாட்டம்

■ எஸ். சதீஸ், ரஞ்சித் ராஜபக்ஷ



'காபட்' இடப்பட்டு புனரமைப்பு பணிகள் ஆரம்பிக்கப்பட்டு தற்போது இடைநிறுத்தப்பட்டுள்ள நோர்வூட்-பொகவந்தலாவை பிரதான வீதியை புனரமைத்த தருமாறு கோரி, பொகவந்தலாவை நகரில் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

நேற்று (20) காலை பொகவந்தலாவை- டியன்சின் சந்தியில் இந்த ஆர்ப்பாட்டம் நட்டைபெற்றது.

குறித்த வீதியூடாக சேவையில் ஈடுபடும் பஸ் உரிமையாளர்கள், ஓட்டோ சாரதிகள், வர்த்தகர்கள், தோட்டத் தொழிலாளர்கள் எனப் பலரும் இந்த ஆர்ப்பாட்டத்தில் இணைந்திருந்தனர்.

ஒரு இலட்சம் கிலோ மீற்றர் தூரத்தை 'காபட்' இட்டு புனரமைக்கும் வேலைத்திட்டத்தின் கீழ், 15 கிலோ மீற்றர் தூரமுடைய குறித்த வீதியின் புனரமைப்பு பணிகள் இரண்டு வருடத்துக்கு முதல் ஆரம்பிக்கப்பட்டு, தற்போது இடைநிறுத்தப்பட்டுள்ளதாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

இந்தப் புனரமைப்பு பணிகளுக்காக பெக்கோ இயந்திரங்கள் பயன்படுத்தப்பட்டு வீதி விரிவுப்படுத்தப்பட்டதால், அப்பிரதேசத்தில் பெய்த கடும் மழையை அடுத்து, விரிவுப்படுத்தப்பட்ட பகுதிகள் குன்றும் குழியுமாக மாறியுள்ளதாக தெரிவித்தனர்.

### தமிழ் மாணவர்களுக்கு

# சிங்கள மொழிப் போட்டி

■ என்.ஆராச்சி

செப்டெம்பர் மாதம் 21ஆம் திகதி அனுஷ்டிக்கப்படவுள்ள சர்வதேச அமைதி தினம் மற்றும் செப்டெம்பர் மாதம் 8ஆம் திகதி அனுஷ்டிக்கப்பட்ட தேசிய மொழிகள் தினம் என்பவற்றை அடிப்படையாக கொண்டு, எதுராபொல தமிழ் வித்தியாலயத்தில் போட்டி நிகழ்வொன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

புளத்கொஹுபிட்டிய பிரதேச செயலகப் பிரிவின் தேசிய ஒருங்கிணைப்பு பிரிவினரால் இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

'இரு மொழிகள் ஊடாக தேசிய ஒருங்கிணைப்பை வளர்க்கலாம்' என்ற தொனிப்பொருளின் கீழ் இந்தப் போட்டி நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதுடன், இதில் தமிழ் மொழி மாணவர்கள் சிங்கள மொழியில் இந்தப் போட்டிகளில் பங்குப் பற்றுகின்றமை சிறப்பம்சமாகும்.

### மஸ்கெலியா பெருந்தோட்ட நிறுவனத்துக்கு

# செந்தில் தொண்டமான் கண்டனம்

மஸ்கெலியா பெருந்தோட்ட நிறுவனம் தொழில் சட்டத்தை தொடர்ந்து மீறுவதற்கு கடும் எதிர்ப்பை வெளியிட்ட இ.தொ.காவின் தலைவர் செந்தில் தொண்டமான், தொழிலாளர்கள் மீதான நவீன அடிமைத்தனத்துக்கு முற்றிப்புள்ளி வைக்க வேண்டும் எனவும் வலியுறுத்தினார்.

மஸ்கெலியா பெருந்தோட்ட நிறுவனம் தொழில் சட்டத்தை தொடர்ந்து மீறி வருகின்றமை மற்றும் தோட்டத் தொழிலாளர்கள் மீதான கம்பனிகளின் நவீன அடிமைத்தனம் தொடர்பில் அம்பட்டிக்கந்த தோட்ட தொழிற்சாலையில் உள்ள இ.தொ.கா உறுப்பினர்களுடன் இ.தொ.காவின் தலைவர் செந்தில் தொண்டமான் கலந்துரையாடல் நடத்தினார்.



அம்பட்டிக்கந்த தோட்ட தொழிற்சாலைக்கு விஜயம் மேற்கொண்ட செந்தில் தொண்டமான், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உறுப்பினர்களை சந்தித்ததுடன் மஸ்கெலியா பெருந்தோட்ட நிறுவனத்தின் அடக்குமுறைகள் தொடர்பில் கேட்டறிந்துகொண்டார். தொழிலாளர்களின் உரிமைகள் மீட்கப்பட்டு, நிர்வாகத்தின் அணுகுமுறை மாறும் வரை தொழிற்சாலையில் தயாரிக்கப்படும் தேயிலை, தொழிற்சாலையில் இருந்து வெளியேற்றுவது நிறுத்திவைக்கப்பட்டு உள்ளமை குறிப்பிடத்தக்கது.



# மூலப்பொருட்களின் தட்டுப்பாட்டால் மூடப்படும் துறைகள்

ஒவ்வொரு துறையும், ஏனைய துறைகளைச் சார்ந்தவர்களின் மேம்பாட்டுக்கு, பாரிய பங்களிப்புகளை வழங்கிக்கொண்டுதான் இருக்கின்றன. பிரதான துறைகளில் முடக்கம் ஏற்படுமாயின், அது இணைத்துறைகளில் கடுமையான பாதிப்புகளை ஏற்படுத்தும். அந்தந்தத் துறைகளைச் சார்ந்தவர்கள், நடு வீதிக்கு இழுத்து வீசப்பட்டுவிடுவர்.

நமது நாட்டைப் பொறுத்தவரையில், கொரோனா வைரஸ் பரவலுக்குப் பின்னர் பல துறைகள் முற்றாக முடங்கிவிட்டன. இன்னும் சில துறைகள் மாயமாகிவிட்டன. பொருளாதார நெருக்கடி காரணமாக, ஒவ்வொரு துறையும் ஆட்டம் கண்டுகொண்டிருக்கின்றது. இந்த நிலைமை இன்னும் நீடித்துக்கொண்டே செல்லுமென எதிர்வு கூறப்பட்டுள்ளது.

ஆபத்தான கட்டத்தில் இருக்கும் துறைகளைச் சேர்ந்தவர்கள், மாற்றுத் தொழில்களைத் தேடி அலைந்து கொண்டிருக்கின்றனர். இல்லையேல், தொழில் இழந்தவர்களின் பட்டியலில் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளனர். பொருளாதார வீழ்ச்சியின் தாக்கம், அந்தளவுக்கு மிகப் பயங்கரமாக உள்ளது. ஆகையால், கிடைக்கும் வேலையை கரிசனையுடன் முன்னெடுப்பதே சகலருக்கும் பொருத்தமானது.

மூலப்பொருட்களின் தட்டுப்பாடு காரணமாக, 95 சதவீதமான நிர்மாணப்பணிகள் தாமதமாகியுள்ளன என இலங்கை தேசிய கட்டுமான சங்கம் தெரிவித்துள்ளது. இந்தத் துறையில் 1.5 மில்லியன் மக்கள் வேலை செய்கின்றனர். அதில், 75 சதவீதமானோர் தற்போது வேலை இல்லாமல் இருக்கின்றனர் என்றும் கூறியுள்ளார்.

நிர்மாணப்பணிகள் பாதிக்கப்படும் போது, அதனோடு இணைந்த சேவைகளை முன்னெடுப்போரும் பாதிக்கப்படுகின்றனர். ஆகையால், வேலைகளை இழந்து நிற்போரின் எண்ணிக்கை, நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே செல்கின்றது.

இந்நிலையில், விலைகள் பன்மடங்குகளால் உயர்ந்தமையால் சீமெந்து பயன்பாட்டில் 19 சதவீதம் சரிவு ஏற்பட்டுள்ளது. இது கட்டுமான நடவடிக்கைகளில் நேரடியான பாதிப்பை ஏற்படுத்தும் என்பதுடன் நாட்டின் மொத்த பொருளாதார உற்பத்தியிலும் கடுமையான தாக்கத்தை ஏற்படுத்தும். அதன் பிரதிபலிப்புகள், நிர்மாணப் பணிகளில் தாமதத்தை ஏற்படுத்துகின்றன.

நாடு எதிர்நோக்கியிருக்கும் அந்நியச் செலாவணி பற்றாக்குறை காரணமாக, ஜூன் மாதத்தில் சீமெந்து இறக்குமதி 84 சதவீதமாக சரிந்தது. அதாவது, 35 ஆயிரம் தொன் சீமெந்து மட்டுமே இறக்குமதி செய்யப்பட்டன.

பொருளாதார நெருக்கடிகள் காரணமாக, ஒவ்வொரு துறையும் கடுமையான பாதிப்புகளுக்கு முகம்கொடுத்துக் கொண்டிருக்கின்றது. ஹோட்டல்கள், உணவகங்களின் நிலைமை இன்னும் மோசமாகிக்கொண்டே போகிறது. நாடளாவிய ரீதியில் இருக்கும் 30 ஆயிரம் ஹோட்டல்கள், உணவகங்களில் சுமார் 10 ஆயிரம் ஹோட்டல்கள், உணவகங்கள் மூடப்பட்டுள்ளன. அதில், கடமையாற்றியவர்கள் வேறு தொழில்களை நாடவேண்டியவர்களாக உள்ளனர். இல்லையேல், அவர்களும் தொழில் இழந்தோர் பட்டியலில் இணைக்கப்பட்டு, தொழிலற்றவர்களாகி விடுகின்றனர்.

அங்கும் மூலப்பொருட்களின் விலை அதிகரிப்பு, கடுமையான தாக்கத்தை செலுத்துகின்றது. இறைச்சி, முட்டை, மரக்கறிகள் மற்றும் ஏனைய இதர பொருட்களின் தட்டுப்பாடும் விலையேற்றமும் பிரதான காரணங்களாக அமைக்கின்றன. இதனால், ஒருசில துறைகளைத் தவிர்ந்த ஏனைய துறைகள் யாவும், மூடப்படும் துறைகளாக மாறிவிட்டன.


## தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




## வாழ்வியல் தரிசனம்

கடவுளைத் தேடுபவர்கள் தங்களைத் தேடுவதேயில்லை. மனதில் அழுக்கை வைத்தால், கடவுள் அதை விரும்புவாரா?

ஆன்மிகத்தில் தூய்மையுடன் வாழ்பவர்கள், மானிட தர்மத்தில் இருந்து விலகுவதில்லை. இல்லா இனங்களும் ஒரே மாதிரியானவை; யாவரும் இறைவன் படைப்புகள் என்றே கருதுவார்கள்.

ஆன்மிகவாதிகள் நாட்டின் தலைவர்களாக வர விரும்ப மாட்டார்கள். அவர்கள் அரசியலுக்கு அப்பாற்பட்டவர்கள்.

ஆசை வயப்பட்டவர்கள், சாதாரண மனிதர்களாவர். பெற்றோலுக்கும் டீசலுக்கும் உலகில் கோரமான முறையில் சண்டை செய்பவர்கள், நல்ல மனிதர்களே அல்ல!

கோபத்தை முன்னிறுத்துபவர்கள் தாங்கள் வீரர்கள் என்று எண்ணிக் கொள்கின்றார்கள். அற்ப விடயங்களின் மூலம், ஒருவரின் குணாதிசயம் எப்படி எனத் தெரியவருகின்றது. நல்லவர்களாக மாறிட ஆன்மாவைச் சுத்தப்படுத்துக!

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

# மனித உரிமைகள் பேரவை தொடர் கதையா?



எம். எஸ். எம் ஐயூப்

நான்கு சர்வதேச மனித உரிமைகள் அமைப்புகளான ‘ஹியூமன் ரைட்ஸ் வொச்’, ‘சர்வதேச மன்னிப்புச் சபை’, ‘மனித உரிமைகள் மற்றும் அபிவிருத்திக்கான ஆசிய அமைப்பு’, ‘சர்வதேச சட்ட வல்லுனர்களின் ஆணைக்குழு’ ஆகியன கூட்டாக, ஐ. நா மனித உரிமைகள் பேரவையின் உறுப்பு நாடுகளுக்கு, இலங்கை விடயத்தில் ஒரு கடிதத்தை அனுப்பியுள்ளன.

தற்போது சுவிட்சர்லாந்து, ஜெனீவா நகரில் நடைபெற்று வரும் மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடரின் போது, இலங்கை தொடர்பாக கடுமையான பிரேரனையை நிறைவேற்ற வேண்டும் என்று கோரியே, அவ்வமைப்புகள் இந்தக் கடிதத்தை அனுப்பியுள்ளன. மனித உரிமைகள் விடயத்தில், இலங்கை அரசாங்கம் நம்பகமான முறையில் நடந்து கொள்வதில்லை என்ற அடிப்படையிலேயே, அவை இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளன.

இம்முறை நடைபெற்று வருவது, ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 51ஆவது கூட்டத்தொடராகும். இக்கூட்டத்தொடர், செப்டெம்பர் மாதம் 12ஆம் திகதி முதல் ஒக்டோபர் மாதம் ஏழாம் திகதி வரை, ஜெனீவா நகரில் நடைபெறும். இதன்போது, இலங்கை தொடர்பாக மற்றுமொரு பிரேரணை நிறைவேற்றப்படவும் இருக்கிறது.

இதற்கு முன்னர் 2009, 2012, 2013, 2014, 2015, 2017, 2019, 2021ஆம் ஆண்டுகளில் மனித உரிமைகள் பேரவையில், இலங்கை தொடர்பாக பிரேரணைகள் நிறைவேற்றப்பட்டு உள்ளன. இவற்றில், 2009ஆம் ஆண்டு பிரேரணை இலங்கையால் முன்வைக்கப்பட்ட பிரேரணையாகும்.

ஏனையவை, அமெரிக்கா, பிரிட்டன் போன்ற வல்லரசு நாடுகள், சில சிறிய நாடுகளுடன் சேர்ந்து, மனித உரிமைகள் பேரவைவில் சமர்ப்பித்தவையாகும். அவற்றில், நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் சமர்ப்பிக்கப்பட்ட 2015ஆம் ஆண்டு பிரேரணைக்கு, அவ்வரசாங்கம் இணை அனுசரணை வழங்கியது. ஏனையவற்றை, இலங்கை அரசாங்கம் நிராகரித்துள்ளது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் காலத்தில், 2021ஆம் ஆண்டு சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணையைத் தவிர, ஏனைய எந்தவொரு பிரேரணையும் இலங்கையின் எந்தவோர் அரசியல் அல்லது இராணுவ அதிகாரியையும் அச்சுறுத்தியதில்லை. 2021ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட 46/1 இலக்கமிடப்பட்ட பிரேரணை மூலம், இலங்கையில் மனித உரிமைகள் மீறல்களில் ஈடுபட்டவர்களை தண்டிக்கும் திட்டமொன்று முன்வைக்கப்பட்டு உள்ளது.

அதற்கு முந்திய சகல பிரேரணைகள் மூலமும், மனித உரிமைகளை மீறியோருக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு மனித உரிமைகள் பேரவை, இலங்கை அரசாங்கத்தையே கேட்டுக்கொண்டது. ஆனால், இலங்கை அவ்வாறு நடவடிக்கை எடுக்காதமையால், இந்தப் பிரேரணையின் மூலம், அந்தந்த நாடுகளிலேயே சட்ட நடவடிக்கை எடுக்க, உறுப்பு நாடுகளிடம் மனித உரிமைகள் பேரவை கேட்டுக் கொண்டுள்ளது.

அத்தோடு, இலங்கையில் மனித உரிமைகள் மீறல் சம்பவங்களைப் பற்றி தகவல்களைத் திரட்டி, அவற்றைப் பகுப்பாய்வு செய்வதற்காக, மனித உரிமைகள் தொடர்பான ஐ.நா உயர்ஸ்தானிகரின் அலுவலகத்தில், தகவல் காப்பகத்தை நிறுவ நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளது.

கடந்த வருட பிரேரணையின் பிரகாரம், எந்தவொரு நாட்டிலாவது இலங்கையில் மனித உரிமைகளை மீறியோருக்கு எதிராக, எதிர்காலத்தில் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டால், அவற்றை நிரூபிப்பதற்காக இந்தத் தகவல் காப்பகத்தின் தகவல்கள் பயன்படுத்தப்படும்.

இதுவே, இலங்கையில் போர் முடிவடைந்ததன் பின்னர், மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட பிரேரணைகள் மூலம் எடுக்கப்படவிருக்கும் மிகவும் கடுமையான நடவடிக்கையாகும். ஏற்கெனவே, பல்வேறு மனித உரிமைகள் மீறல் சம்பவங்கள் தொடர்பான தகவல்கள் அடங்கிய 120,000 கோவைகளைத் தமது அலுவலகம் திரட்டி உள்ளதாக, 2021ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் நடைபெற்ற மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தின் போது, முன்னாள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் மிச்சல் பச்சலே தெரிவித்தார்.

இதற்கு முன்னர், மனித உரிமைகள் பேரவையின் பிரேரணைகளை உதாசீனம் செய்த இலங்கையின் அரசியல் மற்றும் இராணுவ தலைவர்கள், இந்தப் பிரேரணையைக் கண்டு நிச்சயமாக திடுக்கிட்டு இருப்பார்கள். ஏனெனில், இந்தப் பிரேரணையின்படி, இலங்கையல்லாது ஏனைய நாடுகள்தான், மனித உரிமைகள் மீறல்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கும். அந்நாடுகளின் அரசாங்கங்கள் சட்ட நடவடிக்கை எடுக்காவிட்டாலும், தனிநபர்கள் மற்றும் அமைப்புகளால் வழக்குகளைத் தாக்கல் செய்யலாம்.

மனித உரிமைகள் பேரவையின் இவ்வாறான கோரிக்கையொன்று இல்லாமலே, கடந்த காலங்களில் சில நாடுகளில், இலங்கையின் சில இராணுவ அதிகாரிகளுக்கு, மனித உரிமைகள் பிரச்சினைகள் காரணமாக, விசா மறுக்கப்பட்டது. சில நாடுகளில், சில இராணுவ அதிகாரிகளுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்வதற்காக, மனித உரிமைகள் அமைப்புகளால் மனுக்கள் சமர்ப்பிக்கப்பட்டன. ஜெர்மனியில், விடுதலை புலி உறுப்பினர் ஒருவருக்கு எதிராக, வழக்கு விசாரிக்கப்பட்டு சிறைத் தண்டனையும் வழங்கப்பட்டது.

இந்த நிலையில்த்தான் பலம் வாய்ந்த நான்கு சர்வதேச மனித உரிமைகள் அமைப்புகள், இலங்கை விடயத்தில் கடுமையான பிரேரணையை நிறைவேற்றுமாறு, மனித உரிமைகள் பேரவையின் உறுப்பு நாடுகளைக் கேட்டுக் கொண்டுள்ளன.

இவ்வமைப்புகள், தாம் எதிர்பார்க்கும் கடுமையான நடவடிக்கைகள் எவை என அந்தக் கடிதத்தில் குறிப்பிடவில்லை. 46/1 பிரேரணையை மீண்டும் வலியுறுத்துமாறு மட்டுமே கடிதத்தில் குறிப்பிட்டுள்ளன.

மாறிவரும் இந்த நிலைமையின் காரணமாகத்தான், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஆர்ப்பட்டக்காரர்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கவில்லைப் போலும்! கோட்டா கடும் போக்குள்ளவர் என்பது சகலரும் அறிந்த விடயமாகும்.

மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில், பாதுகாப்புச் செயலாளராக கோட்டாபய ராஜபக்ஷ இருந்தபோதே, வடக்கு - கிழக்கில் கடும் அடக்குமுறை கட்டவிழ்த்துவிடப்பட்டு இருந்தது. கட்டுநாயக்க, சிலாபம், ரத்துபஸ்வல, வெலிக்கடை சிறைச்சாலை ஆகிய இடங்களில் ஆர்ப்பாட்டக்காரர்கள் கொல்லப்பட்டனர். ஆனால், ஜனாதிபதியாக பதவியேற்றதன் பின்னர், அவர் ஆர்ப்பட்டக்காரர்களை தாக்க இடமளிக்கவில்லை.

2021ஆம் ஆண்டு ஆசிரியர்கள், அதிபர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டபோது, அவர்களைத் தாக்கி, கலைத்துவிட வேண்டும் என, பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சராக அப்போது இருந்த சரத் வீரசேகர ஆலோசனை கூறியிருந்தார். “எனக்கு வெளிநாடொன்றுக்குப் போக முடியாத நிலைமையை உருவாக்கப் போகிறீரா” என, கோட்டா அப்போது கேட்டதாக பத்திரிகைகள் செய்தி வெளியிட்டு இருந்தன.

ஆயினும், மனித உரிமைகள் பேரவையின் பணிகள் நடைபெறும் வேகத்தைப் பார்க்கும் போது, பாதிக்கப்பட்ட மக்கள் அனைவருக்கும் நியாயம் கிடைக்குமா? அதற்காக இன்னும் எத்தனை ஆண்டுகள் காத்திருக்க வேண்டி வரும் என்றும் சிந்திக்க வேண்டியுள்ளது. அதுவரை, மனித உரிமைகள் பேரவையும் இலங்கை அரசாங்கத்தின் தலைவர்களும், இந்தப் பிரச்சினைகளை விவாதித்துக் கொண்டே இருப்பார்கள் போலும்!

ஒவ்வொரு வருடமும் இலங்கை தலைவர்கள் ஜெனீவாவுக்குச் சென்று, மனித உரிமைகள் பேரவையின் தலைவர்களுக்கு, பல்வேறு வாக்குறுதிகளை வழங்கிவிட்டு வருகிறார்கள். பின்னர் அவற்றை உதாசீனம் செய்கிறார்கள். இதைப் பேரவையின் தலைவர்கள் அறியாமலில்லை. இம்முறை இலங்கை தொடர்பான மனித உரிமைகள் உயர்ஸ்தானிகரின் அறிக்கையில், அது தெளிவாகத் தெரிகிறது.

பதில் உயர்ஸ்தானிகர் நதா அல் நஷிப்பால் சமர்ப்பிக்கப்பட்ட அந்த அறிக்கையில் ஓரிடத்தில், ‘போர் முடிவடைந்து 13 ஆண்டுகள் சென்றடைந்த போதிலும், வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்கள் இன்னமும் காணாமற்போனோர் தொடர்பான உண்மையையும் அவர்களுக்கான நியாயத்தையும் எதிர்ப்பார்த்து நிற்கின்றனர்’ என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ‘மூன்று தசாப்தங்களாக, மனித உரிமைகள் மீறல்கள் விடயத்தில் குறியீடுகளாக விளங்கும் சம்பவங்கள் தொடர்பில், எந்தவித முன்னேற்றமும் காண்பதற்கில்லை’ என்று மற்றோர் இடத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. குற்றங்களுக்கு தண்டனை இல்லாமை, மேன்மேலும் குற்றங்கள் இடம்பெறுவதற்கு காரணமாக இருப்பதாகவும் அதில் சுட்டிக்காட்டப்பட்டு உள்ளது.

போர் நடைபெற்ற காலத்தில் இடம்பெற்ற சம்பவங்களின் உண்மை நிலைமையை அறிய, ‘உண்மைத் தேடும் ஆணைக்குழு’வை நியமிப்பது தொடர்பாக, அரசாங்கத்தின் தலைவர்களும் மனித உரிமைகள் பேரவையின் அதிகாரிகளும் போர் முடிவடைந்த 2009ஆம் ஆண்டு முதல் பேசிக்கொண்டு இருக்கிறார்கள். அவ்வாறிருக்க, உண்மையை அறியும் பொறிமுறையை நிறுவ, அரசாங்கம் முயன்று வருவதாக வெளிநாட்டமைச்சர் அலி சப்ரி, இம்முறை பேரவைக் கூட்டத்தில் உரையாற்றும் போது கூறியிருந்தார்.

இதுவரை, மனித உரிமைகள் விடயத்தில் நியமிக்கப்பட்ட ஆணைக்குழுக்களின் அறிக்கைகளைப் பரிசீலித்து, நியாயம் வழங்கும் விடயத்தில் என்ன செய்யலாம் என்பதை ஆராய, மற்றோர் ஆணைக்குழுவை நியமிப்பதாக 2020ஆம் ஆண்டு மார்ச் மாத கூட்டத்தின் போது, அப்போதைய வெளிநாட்டமைச்சர் தினேஷ் குணவர்தன கூறினார்.

ஆனால், 2021ஆம் ஆண்டு மார்ச் கூட்டம் நெருங்கும் வரை, அரசாங்கம் அவ்வாறானதோர் ஆணைக்குழுவை நியமிக்கவில்லை. ஒரு விடயத்தை இழுத்தடிப்பது எவ்வாறு என்பதற்கு, இது சிறந்த எடுத்துக்காட்டாகும். 2021ஆம் ஆண்டு ஜனவரியில் நியமிக்கப்பட்ட அந்த ஆணைக்குழு, இந்த வருடம் பெப்ரவரி மாதம், தனது இரண்டாவது இடைக்கால அறிக்கையை சமர்ப்பித்தது. அதற்குள் அரசாங்கம் மாறியிருக்கிறது. ஒவ்வோர் அரசாங்கமும், இவ்வாறு தொடர்ந்தும் இழுத்தடிக்கலாம் என்று சிந்திக்கிறது போலும்!

இதன் விளைவாகவே, மனித உரிமைகள் பேரவையின் நிலைப்பாடு சிறிது சிறிதாகக் கடுமையாகி வருகிறது. ஆரம்பத்தில், “நீங்களே குற்றச்சாட்டுகளை விசாரித்துக் கொள்ளுங்கள்” என்று கூறிய பேரவை, இப்போது இலங்கையில் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பாக விசாரிக்குமாறு, ஏனைய நாடுகளைக் கேட்டுக் கொண்டுள்ளது.

எனினும், பாதிக்கப்பட்டோருக்கு எப்போது நியாயம் கிடைக்கும் என்பது இன்னமும் கேள்விக்குறியாகவே இருக்கிறது.

## கடிதங்கள்

### பழுதடைந்த உதிரிப்பாகங்களுடன் சேவையில் ஈடுபடும் கிளிநொச்சி சாலை பஸ்கள்

கிளிநொச்சி மாவட்டத்தில் போக்குவரத்தில் ஈடுபடுகின்ற இலங்கை போக்குவரத்து சபையின் பஸ்கள், அடிக்கடி பழுதடைகின்ற நிலைமை காணப்படுகின்றது.

இலங்கை போக்குவரத்து சபையின் கிளிநொச்சி சாலையில் 30 வரையான பஸ்கள் சேவையில் ஈடுபடுகின்ற போதிலும் பல பஸ்களின் உதிரிப் பாகங்கள், டயர்கள் பழுதடைந்திருப்பதன் காரணமாக, போக்குவரத்தில் ஈடுபடும்போது பயணிகளுடன் இடைவழியில் நிற்கின்ற நிலைமை காணப்படுகின்றது. இதன் காரணமாக, சாரதிகளும் நடத்துநர்களும் பெரும் சிரமங்களுக்கு மத்தியில் பஸ்களை இயக்க வேண்டிய நிலைமை காணப்படுகிறது.

அத்துடன், நடத்துநர்கள், சாரதிகளுடன் பயணிகள் முரண்படும் போது, தமது உயரதிகாரிகளுக்கு பஸ்களின் உதிரிப்பாகங்கள், டயர்கள் சேதமடைந்துள்ளது தொடர்பாக தெரியப்படுத்தப்பட்ட போதிலும் உதிரிப்பாகங்கள், ரயர்கள் மாற்றப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படாததன் காரணமாக, பஸ்கள் இடைவழியில் பழுதடைந்து நிற்பதாக தெரிவிக்கப்படுகிறது.

கிளிநொச்சி மாவட்டத்தில் போக்குவரத்தில் ஈடுபடுகின்ற பஸ்களின் உதிரிப்பாகங்கள், டயர்களை மாற்றுவதற்கு உயரதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும். ஏனெனில், கிளிநொச்சி மாவட்டத்தில் கிராமங்களிலேயே கூடுதலான பஸ்கள் சேவையில் ஈடுபடுகின்றன. பஸ்களின் உதிரிப்பாகங்கள், டயர்களை மாற்றுவதன் மூலம், இடைவழியில் பஸ்கள் நிற்காமல் பயணிப்பதற்கான வழிகள் ஏற்படும் என பயணிகளால் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த அவல நிலைமை குறித்து, அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கோரிக்கை முன்வைக்கப்படுகின்றது.

–நடராசா கிருஸ்ணகுமார்

மும்பை

# இடுகாடுக்கு இடமில்லை கட்டிடங்களால் என்ன பயன்?

## அரசிடம் உச்ச நீதிமன்றம் கேள்வி

இடுகாடுக்கு இடம் இல்லாத போது மும்பையில் வானுயர கட்டிடங்கள் இருந்து என்ன பயன்? என மாநில அரசிடம் மும்பை உச்ச நீதிமன்றம் கேள்வி எழுப்பி உள்ளது.

மும்பை பாந்திரா பகுதியை சேர்ந்த முகமது குரேசி என்பவர் மும்பை உச்ச நீதிமன்றத்தில் மனு ஒன்றை தாக்கல் செய்து இருந்தார். அந்த மனுவில், அவர் சன்னி பிரிவு முஸ்லிம்களுக்கு என பாந்திராவில் இடுகாடு ஒதுக்கப்பட வேண்டும் என கேட்டு இருந்தார். இந்தமனு மீதான விசாரணை தலைமை



நீதிபதி திபான்கர் தத்தா மற்றும் நீதிபதி மாதவ் ஜாம்தார் அடங்கிய அமர்வு முன் நேற்று முன்தினம் (19) நடந்தது.

உயிரிழந்தவர்களுக்கு இறுதிசடங்கு செய்ய இடம் இல்லாமல் இருப்பது மிகப்பெரிய பிரச்சினை என நீதிபதிகள் கூறினர். மேலும் அவர்கள், “இடுகாடுக்கு இடம் இல்லாத போது வானுயர கட்டிடங்கள் இருந்து என்ன பயன்?. உயரமான கட்டிடங்கள் கட்ட நீங்கள் தொடர்ந்து அனுமதி கொடுத்து வருகிறீர்கள். மக்களை மும்பைக்கு வாருங்கள் என கூறுகிறீர்கள். ஆனால் இதுபோன்ற அடிப்படை வசதிகள் கூடஇல்லை” என வேதனை தெரிவித்தனர்.

பின்னர் மனு மீதான விசாரணையை இரண்டு வாரங்களுக்கு ஒத்தி வைத்தனர்.

அகமதாபாத்

### குஜராத்தில் எட்டு மாதங்களில் 50 பேருக்கு தூக்கு தண்டனை

குஜராத் மாநில விசாரணை நீதிமன்றங்களில் 2006 முதல் 2021 வரையிலான 15 ஆண்டுகளில் 46 பேருக்கு மட்டுமே தூக்கு தண்டனை வழங்கப்பட்டுள்ள நிலையில், நிகழாண்டு ஒகஸ்ட் மாதம் வரையிலான 8 மாதங்களில் 50 பேருக்கு தூக்கு தண்டனை வழங்கி தீர்ப்புகள் வெளியாகியுள்ளன.

2002 அகமதாபாத் தொடர் குண்டுவெடிப்பு சம்பவத்தில், 56 பேர் உயிரிழந்தனர். 200க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். இவ்வழக்கை விசாரித்த சிறப்பு நீதிமன்றம், குண்டுவெடிப்பு சம்பவத்துடன் தொடர்புடைய குற்றவாளிகள் 38 பேருக்கு தூக்கு தண்டனை வழங்கி கடந்த பெப்ரவரி தீர்ப்பளித்தது.

மாநிலத்தின் பல்வேறு நகரங்களில் அமைந்துள்ள நீதிமன்றங்கள், குழந்தைகளுக்கு பாலியல் தொந்தரவு மற்றும் கொலை வழக்குகளில் போக்ஸோ சட்டத்தின் கீழ் தூக்கு தண்டனை வழங்கியுள்ளன. ஆணவக் கொலை வழக்கில் இருவருக்கு தூக்கு தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

2006 ஆண்டு முதல் 2021 வரையிலான 15 ஆண்டுகளில் 46 பேருக்கு மட்டுமே தூக்குதண்டனை விதிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. 2021 வரையிலான 15 ஆண்டுகளில் 4 பேருக்கு மட்டும் தூக்கு தண்டனையை குஜராத் உச்ச நீதிமன்றம் உறுதி செய்துள்ளது.

திருவனந்தபுரம்

### ராகுல் காந்தியின் “பாரத் ஜோடோ யாத்ரா”

காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவர் ராகுல்காந்தி ‘‘பாரத் ஜோடோ யாத்ரா’’ என்ற இந்திய ஒற்றுமை பயணத்தை கன்னியாகுமரியில் காந்தி மண்டபம் முன்பு இருந்து தொடங்கினார்.

தமிழக முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் தேசியக் கொடியை ராகுல்காந்தியிடம் வழங்கி பாதயாத்திரையை தொடங்கி வைத்தார். காங்கிரஸ் முன்னாள் தலைவர் ராகுல் காந்தி, கட்சித் தலைவர்கள் மற்றும் தொண்டர்களுடன் இணைந்து மேற்கொண்டுள்ள ‘பாரத் ஜோடோ யாத்திரை’ தமிழகத்தில் தொடங்கி



இப்போது கேரளா வழியாக பயணிக்கிறது.

இந்த நிலையில், நேற்று 13வது நாளாக காங்கிரஸ் எம்.பி ராகுல் காந்தி ஆலப்புழா மாவட்டத்தில் உள்ள சேத்தலா என்றப் பகுதியில் இருந்து காலை நடைபயணத்தை தொடங்கியுள்ளார். கட்சித் தலைவர்கள் மற்றும் தொண்டர்களுடன் மீண்டும் ‘பாரத் ஜோடோ யாத்திரை’யைத் தொடங்கினார்.

தென்காசியில்

### தீண்டாமையால் தின்பண்டங்கள் மறுப்பு

### 5 கிலோ கிராம் தின்பண்டங்களை அனுப்பிய சமூக ஆர்வலர்கள்

தென்காசியில் சாதிய தீண்டாமை கொடுமையால் பள்ளி மாணவர்களுக்கு தின்பண்டங்கள் தர மறுத்த கடைக்காரரை எதிர்த்து கேள்வி எழுப்பிய குழந்தைகளை பாராட்டும் விதமாக மதுரையில் பல்வேறு சாதியினரின் கடைகளில் இருந்து தின்பண்டங்கள் வாங்கி அஞ்சல் மூலம் அனுப்பி வைக்கப்பட்டது.

மேலும், தமிழக அரசு தீண்டாமை கொடுமைகளை தடுக்க வேண்டும் என சமூக ஆர்வலர் தாமாக முன்வந்து கோரிக்கை வைத்துள்ளார்.

தீண்டாமை நோக்கில் தின்பண்டங்கள் வழங்க மறுத்த விவகாரத்தில் 2 பேர் கைது செய்யப்பட்டு, 5 பேர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டு விசாரணை நடத்தப்பட்டு வரும் சூழலில் அம்மாணவர்களுக்கு தமிழக முழுதும் இருந்து ஆதரவு குரல் நீடித்து வருகிறது.

தென்காசியில்

### 16 வயது பெண் கூட்டு பாலியல் வன்புணர்வு

### 3 குற்றாவளிகளின் வீடுகள் புல்டோசர் வைத்து தகர்ப்பு

மத்திய பிரதேச மாநிலம் ரேவா மாவட்டத்தில் உள்ள நைகாரி என்ற பகுதியில் வசிக்கும் 16 வயது இளம்பெண் கடந்த சனிக்கிழமை மாலை ஆண் நண்பருடன் கோயிலுக்கு சென்றுள்ளார்.

அங்கு இருவரும் பேசிக்கொண்டிருந்தபோது இரண்டு சிறார்கள் உள்ளிட்ட ஆறு பேர் வந்துள்ளனர். அவ்விருவரையும் அறுவரும் தாக்கினர். ஆண் நண்பரின் கண்முன்னே பெண்ணை கடத்தி சென்று அருகே உள்ள காட்டுப் பகுதியில் வைத்து கூட்டு பாலியல் வன்புணர்வு செய்துள்ளனர்.

அத்துடன் கடுமையாக தாக்கி அவரது நகை மற்றும் செல்போனை பறித்துக்கொண்டுள்ளனர். இந்த சம்பவத்தை வெளியே தெரிவித்தால் கொன்றுவிடுவோம் என எச்சரித்து அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளனர். கூட்டு பாலியல் வன்புணர்வுக்கு ஆளான பெண் மோசமான உடல்நிலையுடன் மருத்துவமனையில் சிகிச்சை



“ கடுமையாக தாக்கி நகை மற்றும் செல்போன் பறிப்பு

பெற்று வருகிறார்.

பொலிஸில் செய்த முறைப்பாட்டுக்கு அமைய, மூவர் கைது செய்யப்பட்டனர். இன்னும் மூவரை பொலிஸார் தேடுகின்றனர்.

அத்துடன் கைதான மூன்று பேரின் வீடுகளை மற்றும் சொந்தமான இடங்களை மாவட்ட நிர்வாகம் மற்றும் காவல்துறை புல்டோசர் வைத்து இடித்துள்ளது. மீதமுள்ள மூன்று பேரை கைது செய்தவுடன் அவர்கள் உடமைகள் மீது புல்டோசர் நடவடிக்கை எடுக்கப்படும் என நிர்வாகம் தெரிவித்துள்ளது.


இந்தியா

### தொந்தரவாக செல்போன் பயன்படுத்தினால் நடவடிக்கை

சக பயணிகளுக்கு தொந்தரவாக செல்போன் பயன்படுத்தினால் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என இந்தியன் ரயில்வே புதிய உத்தரவு பிறப்பித்துள்ளது.

உலகின் மிகப் பெரிய பயணிகள் சேவை செய்யும் அமைப்பாக இந்திய ரயில்வே உள்ளது. நாள்தோறும் இலட்சக்கணக்கான பயணிகளுக்கு சேவை வழங்கும் இந்திய ரயில்வே தனது சேவைகளை மேம்படுத்தி அதில் உள்ள பிரச்சினைகளை களைய தொடர் நடவடிக்கையை மேற்கொண்டு வருகிறது.

குறிப்பாக முதியோர், பெண்கள்,



மாற்றுத் திறனாளிகள் உள்ளிட்ட பிரிவினருக்கு சிறப்பான சேவைகளை வழங்க ரயில்வே நிர்வாகம் முக்கிய கவனம் செலுத்தி வருகிறது. அதன்படி, இரவு நேர பயணத்தில் ஈடுபடும் பணிகளுக்கு ஏற்படும் இடர்பாடுகளுக்கு தீர்வு காணும் விதமாக புதிய உத்தரவுகளை ரயில்வே நிர்வாகம் வெளியிட்டுள்ளது. அதன்படி, இரவு 10 மணிக்கு மேல் ரயில் பணிகள் பெட்டிகளுக்குள் சத்தமாக போன் பேசுவது, செல்போனில் சத்தமாக பாடல் கேட்பது போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடக் கூடாது.

மேலும், இரவு விளக்கு வெளிச்சத்தை தவிர மற்ற விளக்குகள் மற்றும் செல்போன் வெளிச்சம் போன்றவற்றை பயன்படுத்தி சக பயணிகளின் தூக்கத்தை கெடுக்கக் கூடாது. இரவில் தூங்கும் நேரத்தில் சக பயணிகளுக்கு தொந்தரவு தரும் விதத்தில் எந்த செயல்களையும் பயணிகள் செய்யக் கூடாது.

# பாகிஸ்தானின் நன்கொடை







இலங்கையிலுள்ள சிறுநீரக மாற்று சிகிச்சை நோயாளிகளுக்கு உறுப்பு செயலிழப்பைத் தடுக்க உதவும் உயிர்காக்கும் மருந்துகளை சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவிடம், பாகிஸ்தான் நன்கொடையாக வழங்கியது. அதற்கமைய இந்த நன்கொடை இலங்கையின் கொழும்பில் உள்ள பாகிஸ்தான் உயர் ஸ்தானிகராலயத்தினூடாக இலங்கை சுகாதார அமைச்சகத்திடம் “CCL Pharmaceuticals Pakistan” என்ற நிறுவனம் வழங்கியது.





## தூதுவர் நியமனம்

கொழும்பைத் தளமாகக் கொண்ட இலங்கைக்கான சவூதி அரேபியாவின் முழு அதிகாரமுடைய மற்றும் சிறப்புத் தூதுவராக காலித் ஹமூத் நாசர் அல்தாசம் அல்கஹ்தானி, இலங்கை அரசாங்கத்தின் ஒப்புதலுடன் சவூதி அரேபிய அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டுள்ளார். அவர் தனது தகுதிச் சான்றுகளை இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் செப்டெம்பர் 16ஆம் திகதியன்று கையளித்தார்.



## தூதுவர் நியமனம்

கொழும்பைத் தளமாகக் கொண்ட இலங்கைக்கான நெதர்லாந்து இராச்சியத்தின் முழு அதிகாரமுடைய மற்றும் சிறப்புத் தூதுவராக திருமதி. பொன்னி ஹோர்பாக், இலங்கை அரசாங்கத்தின் ஒப்புதலுடன் நெதர்லாந்து இராச்சிய அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டுள்ளார். அவர் தனது தகுதிச் சான்றுகளை இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் செப்டம்பர் 16ஆந் திகதி கையளித்தார்.







## பணிப்பகிஷ்கரிப்பு

மன்னார் மாவட்ட சட்டத்தரணிகள் அனைவரும் நேற்று (20) செவ்வாய்க்கிழமை முதல் நீதிமன்ற நடவடிக்கைகளில் ஈடுபடாமல் பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர். மன்னார் மாவட்ட சட்டத்தரணிகள் தங்களுக்கும் மக்களுக்கும் ஏற்பட்ட பாதிப்புகள் தொடர்பாக நேற்று முன்தினம் திங்கட்கிழமை (19) ஆம் கூடி எடுத்த ஏகமனதான தீர்மானத்திற்கு அமைவாக பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

( எஸ்.றொசேரியன் லெம்பேட்)

# சிரமதானம்





தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவரின் வீடு அமைந்திருந்த காணியை வட மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் எம்.கே சிவாஜிலிங்கம் தலைமையில் ஊர் மக்கள் இணைந்து துப்புரவு பணிகளை உடனடியாக முன்னெடுத்துள்ளனர்.

யாழ்ப்பாணம் - வல்வெட்டித்துறை பகுதியில் அமைந்துள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் வீட்டுக் காணிக்கு வல்வெட்டித்துறை நகர சபையினால் சிவப்பு எச்சரிக்கை ஒட்டப்பட்டுள்ளது.

அக்காணி பராமரிப்பின்றி கைவிடப்பட்டுள்ளமையால் அப்பகுதியில் பற்றைகள் வளர்ந்துள்ளன. பற்றைகளினால் டெங்கு நுளம்புகள் பரவும் அபாயம் உள்ளது என சுட்டிக்காட்டி , குறித்த காணியை உடனடியாக துப்புரவு செய்ய வேண்டும் எனவும் இல்லாவிடின் குறித்த ஆதனத்தை நகர சபை கையகப்படுத்தும் என அறிவித்தல் ஒட்டப்பட்டுள்ளது.

இந்நிலையில், நேற்று செவ்வாய்க்கிழமை (20) முதல் சிவாஜிலிங்கம் தலைமையில், ஊரவர்கள் ஒன்றிணைந்து, சிரமதானத்தை முன்னெடுத்துள்ளனர் .

( எம்.றொசாந்த் )

பிரித்தானியா

# வைரத்தை ஒப்படையுங்கள்

## பிரித்தானியாவுக்கு தென்ஆபிரிக்கா வலியுறுத்தல்

இங்கிலாந்து அரச பரம்பரை செங்கோலை அலங்கரிக்கும் உலகின் மிக பெரிய வைரம் ஒன்றை திருப்பி அளிக்க கோரி, தென்ஆப்பிரிக்காவில் கோரிக்கைகள் வலுத்து உள்ளன. தென்ஆப்பிரிக்காவில் சுரங்கத்தில் இருந்து 1905ஆம் ஆண்டில் வைரம் ஒன்று அகழ்ந்து எடுக்கப்பட்டது.

பின்னர் காலனி ஆட்சியாளர்கள் அதனை பிரித்தானிய அரச குடும்பத்திடம் ஒப்படைத்து விட்டனர். 'கிரேட் ஸ்டார்' என்றும் 'கல்லினன் 1' என்றும் அழைக்கப்படும் இந்த வைரம், பின்னர் அரச செங்கோலில் பதிக்கப்பட்டு உள்ளது. உலகின் மிகப் பெரியதும், 530.2 கரட் கொண்டதும் நீர்த் துளி வடிவிலானதுமான இந்த வைரம், சிலுவையுடன் கூடிய செங்கோலில் சேர்க்கப்பட்டது. இந்நிலையில், இராணி இரண்டாம் எலிசபெத் மறைவை அடுத்து, இந்தக் கல்லினன் வைரம் தங்களுக்கு சொந்தம் என்றும் அதனை உடனடியாக திருப்பி ஒப்படைக்கும்படியும் தென்ஆபிரிக்கா வேண்டுகோள் விடுத்துள்ளது. இதுபற்றி தென்ஆப்பிரிக்காவின் சமூக ஆர்வலரான தண்டுக்சோலோ சபேலோ என்பவர், "எங்களுடைய நாட்டின் மற்றும் பிற நாடுகளின் தாதுக்கள் எங்களது மக்களின் உழைப்பின் பலனால் தொடர்ந்து இங்கிலாந்துக்கு பயன் அளித்து கொண்டிருக்கின்றன" என அவர் கூறியுள்ளார்.

அண்டார்டிகா

### அண்டார்டிகாவிலும் நுழைந்தது

## எலான் மஸ்கின் 'ஸ்டார்லிங்க்'

உலகின் முன்னணி பணக்காரரான எலான் மஸ்க்கிற்குச் சொந்தமான ஸ்பேஸ்-எக்ஸ் நிறுவனம், ஸ்டார்லிங்க் செயற்கைக்கோள் வழியாக இணைய சேவையை உலகின் பல நாடுகளில் வழங்கி வருகிறது.

எவ்வாறு இருப்பினும் உலகின் 7 கண்டங்களில் அண்டார்டிகாவில் மட்டும் ஸ்டார்லிங்க் செயற்கைக்கோள் வழி இணைய சேவை இல்லாமல் இருந்தது. இந்நிலையில் ஸ்டார்லிங்க் சேவை அண்டார்டிகாவிற்கும் தற்போது சென்று அடைந்துள்ளது. இது குறித்து எலான் மஸ்க் இன்று வெளியிட்டுள்ள டுவிட்டர் பதிவில், "ஸ்டார்லிங்க் இப்போது அண்டார்டிகா உட்பட அனைத்து கண்டங்களிலும் செயலில் உள்ளது" என தெரிவித்துள்ளார்.

கடந்த வாரம், ஸ்பேஸ்எக்ஸ் அதன் ஸ்டார்லிங்க் இணைய முனையங்களில் ஒன்றை அண்டார்டிகாவில் உள்ள மெக்முர்டோ நிலையத்தில் சோதனை செய்து இருந்தது குறிப்பிடத்தக்கது.

நைஜீரியா

## நைஜீரியாவில் கோர விபத்து; 19 பேர் உயிரிழப்பு

நைஜீரியாவில் கனரக வாகனமும் பஸ்களும் அடுத்தடுத்து மோதி விபத்துக்கு உள்ளானதில் 19 பேர் உயிரிழந்த சம்பவம் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. தலைநகர் அபுஜாவில் உள்ள நெடுஞ்சாலையிலேயே இக் கோரவிபத்து இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. சம்பவதினத்தன்று வேகமாகச் சென்றுகொண்டிருந்த பஸ், முன்னால் சென்று கொண்டிருந்த பஸ்ஸை முந்திச் செல்ல முயன்ற போதே, குறித்த பஸ் வேகக் கட்டுப்பாட்டை இழந்து எதிரே வந்த கனரக வாகத்துடன் மோதி விபத்துக்குள்ளானதாகவும் அடுத்த சில நொடிகளில் பின்னால் வந்த மற்றொரு பஸ்ஸும் கனரக வாகனத்தின் மீது மோதி விபத்துக்குள்ளானதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் 3 வாகனங்களும் தீப்பற்றி எரிந்ததாகவும், இக்கோர விபத்தில் 19 பேர் சம்பவ இடத்திலேயே உடல் கருகி உயிரிழந்தனர் எனவும், மேலும் 18 பேர் படுகாயங்களுக்குள்ளான நிலையில் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவுஸ்திரேலியா

## சூட்கேஸில் அடைக்கப்பட்டு பாதுகாக்கப்படும் உடல்கள்

அவுஸ்திரேலியாவில் இறந்துபோன விலங்குகளின் உடலங்களை சூட்கேசில் வைத்து பாதுகாத்து வருவது ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

காலநிலை, வெப்பநிலை ஆகியவை உயிரிழந்த விலங்குகளின் உடலங்களில் எவ்வாறு ஆதிக்கம் செலுத்துகின்றன என்பதை ஆய்வு செய்யும் விதமாகவே இவ்வாராய்ச்சி இடம்பெறுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்கு அவுஸ்திரேலியாவின் புதர் நிலங்களிலேயே இந்த ஆய்வு நடைபெற்று வருவதாகவும் இங்கு சுமார் 70 பெட்டிகளில் இறந்துபோன பன்றிகளின் உடலங்கள் பாதுகாக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உடல் சிதைவடையும் போது நடைபெறும் படிநிலைகள் குறித்து தடயவியல் நிபுணர்கள் அறிந்துகொள்ள இந்த ஆராய்ச்சி உதவும் எனவும் குறிப்பாக, குற்றவியல் வழக்குகளில் குற்றவாளிகளை விரைந்து பிடிக்கவும் இது உதவி செய்யும் எனவும் ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர். இதுகுறித்து பேசிய முர்டோக் பல்கலைக்கழகத்தின் தடய அறிவியல் மூத்த விரிவுரையாளர் பாவ்லா

**❝ உடல் சிதைவடையும் போது நடைபெறும் படிநிலைகள் குறித்து தடயவியல் நிபுணர்கள் அறிந்துகொள்ளவும் குற்றவியல் வழக்குகளில் குற்றவாளிகளை விரைந்து பிடிக்கவும் உதவி செய்யும்**

மாக்னி, "ஒவ்வோர் ஆண்டும் டஜன் கணக்கான மனித உடலங்கள் மறைவான இடங்களில் பதுக்கப்படுகின்றன. குற்றத்திலிருந்து தப்பிக்கவும், உடலை ஓர் இடத்தில் இருந்து மற்றோர் இடத்திற்கு எடுத்துச் செல்லவும் சூட்கேஸ்கள்,பைகள், வீல் பின்ஸ், கார் டிரங்குகள், குளிர்சாதன பெட்டிகள், உறைவிப்பான்கள் ஆகியவற்றை குற்றவாளிகள் பயன்படுத்துகின்றனர்.

அதிகாரிகளால் எளிதில் பிடிக்கப்படாமல் இருக்கவும் தற்காலிகமாக உடலை பாதுகாக்கவும் இதுபோன்ற பொருட்கள் பயன்படுத்தப்படுகின்றன. ஆகவே, இதனுள் உடல்கள் எவ்வாறு சிதைவுறுகின்றன என்பதை ஆராய்ந்து வருகிறோம்" என்றார்.

இந்நிலையில் இவ் ஆய்வில் திரட்டப்பட்ட தரவுகள் அடுத்த ஆண்டு நடைபெற இருக்கும் பிரம்மாண்ட தடயவியல் மாநாட்டில் சமர்ப்பிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அயர்லாந்து

## பெண்ணின் வயிற்றுக்குள் 51 பட்டரிகள்

**❝ மலத்துடன் 5 ஏஏ ரக பட்டரிகள் வெளிவந்த நிலையில் சத்திரசிகிச்சை மூலம் 46 பட்டரிகளை எடுத்தனர் மருத்துவர்கள் வெற்றிகரமாக அகற்றியுள்ளனர்**

அயர்லாந்தைச் சேர்ந்த பெண்ணொருவர் சுமார் 51 பட்டரிகளை விழுங்கிய சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

66 வயதான பெண் ஒருவரே இவ்வாறு 50க்கும் மேற்பட்ட ஏஏ மற்றும் ஏஏஏ ரக பட்ரிகளை விழுங்கியுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. குறித்த பெண் அயர்லாந்திலுள்ள வின்செண்ட் பல்கலைக்கழக மருத்துவமனையில் கடும் வயிற்று வலி காரணமாக அனுமதிக்கப்பட்ட நிலையில், அவரது வயிற்றை எக்ஸ்-ரே எடுத்து மருத்துவர்கள் பார்த்தபோது அவரில் உடலில் 50க்கும் மேற்பட்ட பட்டரிகள் இருப்பது தெரியவந்தது. எனினும் அதிர்ஷ்டவசமாக அவரின் இரைப்பை, குடல் பாதையை அடைத்துக் கொண்டு, அவற்றைத் தடுக்கும் வகையில் பட்டரிகள் எதுவும் எக்ஸ்-ரேவில் தோன்றவில்லை என மருத்துவர்கள் தெரிவித்தனர்.

இந்நிலையில் அந்தப் பெண்ணின் உடலில் இருந்து இயற்கையாக மலத்துடன் பட்டரிகள் வெளியேறும் வரை மருத்துவர்கள் காத்திருந்தனர். இந்நிலையில் மலத்துடன் 5 ஏஏ ரக பட்டரிகளை அவர் வெளியேற்றிய நிலையில் அவருக்கு தீராத வயிற்று வலி ஏற்படவே, சத்திரசிகிச்சை மூலம் 46 பட்டரிகளை மருத்துவர்கள் வெற்றிகரமாக அகற்றியுள்ளனர்.

ஆப்கானிஸ்தான்

## 'பப்ஜி', 'டிக்டொக்' செயலிகளுக்கு தலிபான்கள் தடை

ஆப்கானிஸ்தானில் கடந்த ஆண்டு ஓகஸ்ட் மாதம் தலிபான்கள் ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றினர். இதைத்தொடர்ந்து அங்கு பல்வேறு கட்டுப்பாடுகளைத் தலிபான் அரசாங்கம் விதித்து வருகிறது.

பல்வேறு இணையதளங்களுக்கும் அங்கு தடைகள் விதிக்கப்பட்டுள்ளன.

**❝ 23.4 மில்லியன் இணையதளங்கள் ஏற்கெனவே ஆப்கானில் தடை செய்யப்பட்டுள்ளன. புதிய பெயர்களில் மீண்டும் அதே தளங்கள் தொடங்கப்படுகின்றன**

இதன்படி 23.4 மில்லியன் இணையதளங்கள் ஏற்கெனவே ஆப்கானில் தடை செய்யப்பட்டுள்ளன. புதிய பெயர்களில் மீண்டும் அதே தளங்கள் தொடங்கப்படுவதாக அந்நாட்டு தகவல் தொடர்பு அமைச்சர் கருத்து தெரிவித்திருந்தார். இந்நிலையில் அடுத்த 3 மாதங்களுக்குள் ஆப்கானிஸ்தானில் 'டிக்டொக்', 'பப்ஜி' ஆகியவற்றுக்கு தடை விதிக்கப்படவுள்ளதாக தலிபான் அரசாங்கம் அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

### 35 வருடங்களாக திருத்தப்படாத

# கால்பந்தாட்ட சம்மேளனத்தின் யாப்பு உடனடியாக திருத்தப்பட வேண்டும்



இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனத்தின் யாப்பை திருத்துமாறு சர்வதேச கால்பந்தாட்ட சம்மேளனம் பல தடவைகள் அறிவித்தும் அது திருத்தப்படவில்லை எனவும் சர்வதேச கால்பந்தாட்ட சம்மேளனத்தின் பரிந்துரைகளுக்கு அமைவாக இலங்கைக்கு ஏற்றவாறு அதன் யாப்பை துரிதமாகத் திருத்துவதற்கு நடவடிக்கைகள் எடுப்பதாகவும் இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனத்தின் தலைவர் ஜஸ்வர் உமர் தெரிவித்துள்ளார்.

இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனத்தின் யாப்பு 2002ஆம் ஆண்டு சிறிதளவு திருத்தப்பட்டது. மீண்டும் சர்வதேச கால்பந்தாட்ட சம்மேளனம் 2014ஆம் ஆண்டு இந்த யாப்பைத் திருத்தும்படி இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனத்துக்கு அறிவித்தபோதும் அது மாற்றப்படவில்லை. அப்போது கால்பந்தாட்ட சம்மேளனத்தின் தலைவராக ரஞ்சித் றொட்றிகோ இருந்தார். மேலும் அநுர டி சில்வா தலைவராக செயற்பட்ட சமயத்திலும் சர்வதேச கால்பந்தாட்ட சம்மேளனம் இந்த யாப்பைத் திருத்துமாறு அறிவித்திருந்தபோதிலும் அது திருத்தப்படவில்லை.

2021ஆம் ஆண்டு இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனத்தின் அடுத்த தேர்தலுக்கு முன்னர் இந்த யாப்பை திருத்த சர்வதேச கால்பந்தாட்ட சம்மேளனம் வலியுறுத்தியுள்ளது. அதன் எதிரொலியாக இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனத்தின் புதிய யாப்பு வரைவு தயாரிக்கப்பட்டு அதன் பிரதிகள் மே 2022 க்கு முன்னர் விளையாட்டு அமைச்சு மற்றும் கால்பந்தாட்ட சம்மேளனத்தின் அனைத்து உறுப்பினர்களும் அனுப்பப்பட்டன.

இந்தப் புதிய யாப்பில் சுயாதீன நிதி நிர்வாகம், சுயாதீன தேர்தல் முறை, சுயாதீன ஒழுக்காற்று குழுக்கள் உள்ளிட்ட தெளிவான அதிகாரப் பகிர்வு முறைமை உருவாக்கப்பட்டுள்ளது. இந்த யாப்பை நிறைவேற்றுவதற்கு இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனத்தின் பொதுச் சபையின் மூன்றில் இரண்டு அங்கிகாரம் ஏற்கெனவே கிடைத்துள்ளது.

**❝ புதிய யாப்பில் சுயாதீன நிதி நிர்வாகம், சுயாதீன தேர்தல் முறை, சுயாதீன ஒழுக்காற்று குழுக்கள் உள்ளிட்ட தெளிவான அதிகாரப் பகிர்வு முறைமை உருவாக்கப்பட்டுள்ளது. இந்த யாப்பை நிறைவேற்றுவதற்கு சம்மேளனத்தின் பொதுச் சபையின் மூன்றில் இரண்டு அங்கிகாரம் கிடைத்துள்ளது. தேவையான ஆலோசனைகளை வழங்க சர்வதேச கால்பந்தாட்ட சம்மேளனத்தின் இரண்டு பிரதிநிதிகள் நாட்டுக்கு வந்துள்ளனர்**

இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனத்தின் யாப்பைத் திருத்துவதற்கு தேவையான ஆலோசனைகள் மற்றும் கண்காணிப்புகளுக்காக சர்வதேச கால்பந்தாட்ட சம்மேளனத்தின் இரண்டு பிரதிநிதிகளும், ஆசிய கால்பந்தாட்ட சம்மேளனத்தின் ஒரு பிரதிநிதியும் ஏற்கெனவே நாட்டுக்கு வந்துள்ளனர்.



### உலகக் கிண்ணத்துக்கான

## நியூசிலாந்து குழாமில் அடம் மில்ன்

சர்வதேச கிரிக்கெட் சபையின் இருபதுக்கு - 20 உலகக் கிண்ணத் தொடருக்கான நியூசிலாந்துக் குழாமில் வேகப்பந்துவீச்சாளர் அடம் மில்ன் இடம்பெற்றுள்ளார்.

இந்நிலையில், காயம் காரணமாக கைல் ஜேமிஸன் குழாமில் இடம்பெறாததுடன், விக்கெட் காப்பாளர் டிம் செய்ஃபேர்ட்டும் குழாமில் இடம்பெறவில்லை. டெவோன் கொன்வேயே விக்கெட் காப்பில் ஈடுபடவுள்ளார்.

குழாம்: கேன் வில்லியம்ஸன் (அணித்தலைவர்), பின் அலென், ட்ரெண்ட் போல்ட், மிஷெல் பிறேஸ்வெல், மார்க் சப்மன், டெவோன் கொன்வே (விக்கெட் காப்பாளர்), லொக்கி பெர்கியூசன், மார்டின் கப்தில், அடம் மில்ன், டரைல் மிற்செல், ஜிம்மி நீஷம், கிளென் பிலிப்ஸ், மிற்செல் சான்ட்னெர், இஷ் சோதி, டிம் செளதி.



### பூப்பந்தாட்ட போட்டியில்


## அகில இலங்கை மட்டத்துக்குத் தெரிவான காரைதீவு விபுலானந்தா

■ சகா

கிழக்கு மாகாண கல்வித் திணைக்களம் நடாத்தி வரும் விளையாட்டுப் போட்டிகளில் 18 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான பூப்பந்தாட்டத் தொடரில் கல்முனை வலயத்தின் காரைதீவு விபுலானந்தா தேசிய பாடசாலை அணி மாகாண சம்பியனாகி அகில இலங்கை ரீதியிலான போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

நிந்தவூர் அஷ்ரக் தேசிய பாடசாலை உள்ளக அரங்கில் அண்மையில் நடைபெற்ற 18 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான பிரிவின் இறுதிப் போட்டியில் 3-1 என்ற ரீதியில் திருகோணமலை மாவட்ட அணியை வென்றே அம்பாறை மாவட்ட அணியான விபுலானந்தா அணி சம்பியனானது.

## செல்சிக்குச் செல்லும் கேன்?



இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகமான டொட்டென்ஹாம் ஹொட்ஸ்பரின் முன்களவீரரான ஹரி கேனை இன்னொரு பிறீமியர் லீக் கழகமான செல்சி கைச்சாத்திட அக்கழகத்தின் புதிய முகாமையாளர் கிரஹாம் போட்டர் விரும்புகிறார்.

29 வயயதான கேனுக்குப் பதிலாக தற்போது இத்தாலிய சீரி ஏ கழகமான இன்டர் மிலனில் கடனடிப்படையிலுள்ள றொமெலு லுக்காக்குவை வழங்குவதற்கு பொட்டர் தயாராகவுள்ளதாகக் கூறப்படுகிறது.

## பார்சிலோனா செல்லும் அஸென்ஸியோ?



ஸ்பானிய லா லிகா கால்பந்தாட்டக் கழகமான றியல் மட்றிட்டின் முன்களவீரரான மார்கோ அஸென்ஸியோவைக் கைச்சாத்திட இன்னொரு ஸ்பானியக் கழகமான பார்சிலோனா முயல்வதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நடப்புப் பருவகாலத்தில் பெரும்பாலும் அணியில் தெரிவு செய்யப்பட்டிருக்காத

**❝ றியல் மட்றிட்டின் முன்களவீரரான மார்கோ அஸென்ஸியோவைக் கைச்சாத்திட பார்சிலோனா முயல்வதாகத் தெரிவிக்கப்படுகிறது**

26 வயதான அஸென்ஸியோ, றியல் மட்றிட்டுடன் இன்னும் ஓராண்டு ஒப்பந்தத்தையே கொண்டிருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் புதன்கிழமை, 21 செப்டெம்பர் 2022, இல. 08, ஹுணுபிட்டி குறுக்கு வீதி, கொழும்பு-02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.